Free Circulation Germany- England
மணி: 70 - ஓசை: 287 ஆவணி. August.2020

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
Successful Publishing 26 years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A




# இராவணனின் 'புஷ்பக' விமானம்: தேடும் ஆராய்ச்சியை ஆரம்பித்தது இலங்கை!

Dr.IN

## தமிழ் மக்களின் அரசியல் போக்கில் திருப்பத்தை ஏற்படுத்துமா தேர்தல்?

கொழும்பிலிருந்து ஆர்.பாரதி



## எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன்!



## வெற்றிமணி வழங்கிய 'திருமுகம் காணும் திருவிழா'





# எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன்!


● மாதவி

**எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன்!**

இந்த வசனம் நாம் அடிக்கடி அம்மாவிடமும் அப்பாவிடமும் அதற்கு மேலாக காதலியிடமும் காதலனிடமும் கேட்டவைதான்.

அன்பும், காதலும், தனக்கே உரிய சக்திகொண்டு எந்த ஒரு தொடர்பு ஊடகமும் இன்றி ஒருவரது இருப்பைக் கண்டுகொள்ளும் வல்லமை உள்ளதாகத் திகழ்கிறது. தற்போது அன்பும், காதலும் அதன் அக்கறைகள் சற்று தேய்ந்து சேதாரமாகிவிட்டதால் அதன் இருப்பை அறிய விஞ்ஞானம் கைகொடுக்க வந்துள்ளது.

அன்று ஆட்டைக்காணவிட்டால் தெருத்தெருவாக கையில் குழையுடன் – செவியாடு ஒன்று இந்தப்பக்கம் வந்ததா அந்தப்பக்கம் வந்ததா என்று போறவர்கள் வாறவர்கள் எல்லோரையும் கேட்டுக் கேட்டுக் களைத்து போய் வீடு வந்தால் சிலசமயம் எங்கோ ஒரு வீட்டு அடுப்படிக்குள் ஆட்டு இறைச்சி வாசம் மூக்கைத்துளைக்கும்.

ராஜாத் தியேட்டரில் படம் பார்க்க யாழ்ப்பாணம் சென்று, 15 சதம் சைக்கிள் செட்டுக்கு கொடுக்க மனமில்லாமல் எதிர்பக்கத் தேத்தண்ணிக் கடைக்கு முன்னால் சைக்கிளைவிட்டு பூட்டிவிட்டு சிவாஜி நடித்த பாபு படத்தை பார்த்துவிட்டு அழுது கொண்டு வெளியில் வந்தால், சைக்கிளை விட்ட இடத்தில் காணது அழவேண்டி இருக்கும். திறப்பு அப்படியே பொக்கற்றுக்குள் இருக்க ரலிச்சைக்கிள் மட்டும் திருட்டுபோய்விடும்.

> **இப்படி கட்டிவைத்த**
> **ஆட்டைக்காணோம்**
> **பூட்டிவைத்த ரலிச்சைக்கிளைக்**
> **காணோம்.**
> **கூட்டுக்குள் அடைத்த**
> **கோழியைக்காணோம்**

இப்படி பாதுகாப்பாக வைத்தவை பலவும் காணாமல்போய்விடும் காலத்தில் பிறந்து வளர்ந்த எமக்கு. இன்று அதிசயமாக சுதந்திரமாக வெளிப்படையாக பலரும் காணும்படியாகவும் காணதபடியாகவும் நிறுத்திவைக்கும் மின்சார ஸ்கூட்டர் நிறுத்திய இடத்தில் அசையாது அப்படியே நிற்கிறது.

இ–ஸ்கூட்டர்கள் வந்துவிட்டன! அவை தெருவில் விட்ட இடத்தில் நிற்கின்றது!!!

2019 ஆம் ஆண்டு கோடையில் இருந்து ஜெர்மனியில் போக்குவரத்து இன்னும் ஒரு முறையால் வளப்படுத்தப்பட்டுள்ளது. மின்–ஸ்கூட்டர்களை இப்போது பொது இடத்தில் காணலாம். 48 நகரங்களில் 17 மில்லியனுக்கு மேலான பயணங்களை மக்கள் மேற் கொண்டுள்ளனர். தங்கள் உடன்பிறப்புகளைப் போலவே, மின்சார மோட்டார்–ஸ்கூட்டர்களும் வாழ்வோடு கலந்து விட்டன [பெரும்பாலும் 'இ–ஸ்கூட்டர்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன]



யேர்மனியில் பேர்லின் பம்பேக் பிராங்பேட் பிறேமன் டோட்மூண்ட் என பல நகரங்களில் இந்த சைக்கிள்கள் தெருவோரம் பூங்காக்கள் ஏன் குச்சு தெருக்கள் எல்லாம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. யாரும் தொடுவதாக இல்லை. நிச்சயமாக கொரோனா பயம் அதற்கு காரணம் அல்ல. அதற்கும் மேல் ஒரு பயம் அதற்குள் இருக்கும் அப்ஸ்சுக்கு Apps இருக்கு.

வாடகை கார்போல இவையும் வந்து விட்டன. கார் Frankfurt இல் வாடகைகு எடுத்து Dortmund அந்த நிறுவனத்தின் கிளைகளில் விடுவது போல அல்ல, இது அதற்கும் மேலாக தெருவில் எடுத்து எந்தத் தெருவிலும் விட்டுசெல்லும் புது முறை அறிமுகத்திற்கு வந்துள்ளது.

உங்கள் தொலைபேசியில் ஒரு அப்ஸ்சை [Apps] பதிவு செய்தால் போதும். அது உங்கள் அருகில் உள்ள பைக்கை காட்டும். அங்கு சென்று அந்த அப்ஸ் மூலம் ஸ்கன் செய்து விட்டு ஓடவேண்டியதுதான். எங்கு போகிறீங்களோ அங்கு நிறுத்திவிட்டுப் போகவேண்டியது தான். சொந்த வாகனம் என்றால் கூட இப்படி நடக்க முடியாது அல்லவா.

மின்சார பற்றியின் அளவு குறைந்தால் என்ன செய்வது என்று கேட்கிறீங்களா? முன்பு ஆடுகளை தெருத்




தெருவாக மேய்வதற்கு விட்டாலும் ஆட்டுக்காரர் ஒரு வாளியுடன் வந்து அந்த ஆடுகளுக்கு புண்ணாக்கு தண்ணீர் எனக் கொடுத்துவிட்டுப் போவதை பார்த்திருப்பீர்கள். அதே போல் இங்கும் எந்த பைக்கிற்கு மின்சாரம் தேவைப்படுகிறதோ அந்த இடத்திற்கு ஒருவர் வாகனத்தில் வந்து அந்த பைக்குகளுக்கு மின்சாரம் ஏற்றி விட்டுச் செல்வார்.

எங்கு இருந்தாலும் பைக்கை கண்டு பிடிக்க அன்பு பாசம் அக்கறை எதுவும் தேவை இல்லை, அந்த அப்ஸ் இருந்தால் போதும். அவர்களால் உலகில் எந்த மூலையில் இருந்தாலும் கண்டுபிடித்துவிடுவார்கள்.

அப்ஸ் இருக்கும் துணிச்சலில் அந்த பைக் நடு இரவிலும் துணிச்சலுடன் தெருவில் நிற்கிறது. எவரும் கைவைக்கமுடியாது. வருங்காலத்தில் பொலீஸார் ரோந்து

22 ஆம் பக்கம் பார்க்க...








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி

தமிழ் எங்கள்
உயிருக்கு மேல்

ஓசை : 287



ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவிக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A
Chief Edito:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Brinker Höhe 13
58507 Lüdenscheid
Germany
Tel: +49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# தமிழ் மக்களின் அரசியல் போக்கில் திருப்பத்தை ஏற்படுத்துமா தேர்தல்?

**கொழும்பிலிருந்து ஆர்.பாரதி**

இலங்கையில் தேர்தல் களம் கொரோனாவை கடந்து சூடு பிடித்துள்ளது. ஆகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டுள்ளன. மீண்டும் கொரோனா அச்சம் ஆட்கொண்டு இரண்டாம் அலை என பேசப்படுகிறது. இந்த இரண்டாம் அலையின் வருகைக்கு மத்தியில் தேர்தல் பிரச்சாரங்களை அரசியல் கட்சிகள் முன்வைத்து வருகின்றன. இதற்கான கட்டுப்பாடுகள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன. பொதுத் தேர்தலின் போதும் பல கட்டுப்பாடுகளுடன்தான் மக்கள் வாக்களிக்கப்போகின்றார்கள்.

தமிழர்களைப் பொறுத்தவரையிலும் இந்தத் தேர்தல் முக்கியமானதுதான். வடக்கு, கிழக்கு அரசியலைப் பொறுத்தவரையில் கட்சிகள், கொள்கைகள் என்பவற்றைத் தாண்டி சுமந்திரனே அதிகமாகப் பேசப்படுகிறார். தினசரி அவர் வெளியிடும் அறிக்கைகளும், அவரது செயற்பாடுகளும் அனைத்துக் கட்சிகளும் அவரை மையமாகக் கொண்ட பிரச்சாரம் ஒன்றை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இது அவரது வாக்கு வங்கியில் தாக்கத்தை ஏற்படுத்துமா இல்லையா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். கிழக்கில் அண்மைக்காலத்தில் கருணா பேசு பொருளாகியிருக்கின்றார்.

வடக்கைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு [இலங்கைத் தமிழரசு கட்சி], தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி [அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்], தமிழ் மக்கள் தேசிய கூட்டணி [விக்கினேஸ்வரன் தலைமையிலான அணி], ஈழ மக்கள் ஜனநாயக கட்சி [ஈ.பி.டி.பி], தமிழர் சமூக ஜனநாயக கட்சி [ஈ.பி.ஆர்எல்.எப் வரதர் அணி], பொது ஜன பெரமுனை [ராஜபக்ஷககள்], ஐக்கிய தேசிய கட்சி [ரணில் அணி], ஐக்கிய மக்கள் சக்தி [சஜித் அணி], ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, இப்படி பிரதான கட்சிகள் களமிறங்கியுள்ளன.

அதேவேளை சுயேச்சைக் குழுவாக போட்டியிடும் மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான சுயேச்சைக் குழு, முன்னாள் வடமாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையிலான சுயேட்சைக்குழு, வடக்கு வாழ் இந்திய வம்சாவளி மக்களின் சுயேச்சைக் குழு, பேரினவாத கட்சிகள் வாக்குகளை சிதறடிப்பற்கென இறக்கிவிடப்பட்டுள்ள சுயேச்சைக் குழுக்கள் என பல அணிகள் களமிறங்கி உள்ளன. சுமார் 30 அணிகள் வடக்கில் களமிறங்கியிருக்கும் நிலையில், மக்களுடைய தெரிவாக பிரதானமான சில கட்சிகள் தான் இருக்கப் போகின்றன.



இப்போதைய ஆளுந்தரப்பின் ஒரே தமிழ் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா கடந்த காலங்களில் அமைச்சுப் பதவி வகித்ததன் மூலம் அபிவிருத்தி அரசியலை வடக்கிலே முன்னெடுத்துள்ளார். ஆனால், கடந்த நான்கரை வருடங்களாக அந்த வாய்ப்பு அவருக்கு இல்லாமல் போயிருந்தது. எல்லோருமே அரசின் எதிரணி என்று இருந்திருந்தால் அரசாங்கத்தின் சேவைகளை, அபிவிருத்திகளை வடக்குநோக்கிக்கொண்டுவருவதிலும் வடக்கு மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டி வந்திருக்கும். அதனை டக்ளஸ் சரிவர முன்னெடுத்தார் என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

ராஜபக்ஷ அரசு இனவாதப் போக்கோடு பௌத்த பேரினவாத கருத்தாக்கத்தை புராதன தடயங்கள் மீது கட்டமைக்க உருவாக்கியுள்ள செயலணியில் வடக்கு– கிழக்கு தமிழர் தரப்பில் ஒருவர் இல்லாத நிலையை கூட போக்கும் வல்லமை டக்ளசிடத்தில் இருக்கவில்லை. இது குறித்து அவர் முன்வைத்த கோரிக்கையை ராஜபக்ஷக்கள் கணக்கில் எடுக்கவில்லை என்பது தேவானந்தாவுக்கு ஒரு பின்னடைவு தான். ஆனால், தன்னுடைய வாக்கு வங்கி நிலையானதாக இருக்கும் என அவர் நம்புகின்றார். அதனால், ஒன்று அல்லது இரண்டு ஆசனங்கள் தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர் வெளியிட்டு வருகின்றார்.

ஆனால், கடந்த பொதுத் தேர்தலில் ஈ..பி.டி.பி. சார்பில் போட்டியிட்ட மு.சந்திரகுமார் இப்போது தனியாகக் களமிறங்கியுள்ளார். சந்திரகுமாருக்கு கிளிநொச்சியில் கணிசமான வாக்குப் பலம் உள்ளது. தேவானந்தாவின் வாக்கு வங்கியில் இது எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் பொறுத்திருந்தான் பார்க்க வேண்டும்.

இதே நிலைமையை ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிக்கும் விஜயகலாவின் எதிர்கால அரசியலும் கேள்விக்கு உள்ளாகிறது. கடந்த தேர்தலில் சொற்ப வாக்கு

27 ஆம் பக்கம் பார்க்க...



### யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை பீடாதிபதி

# திரு. குருபரன் பதவி துறப்பு! மனவேதனை தருகிறது!!

Jude Prakash

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை பீடாதிபதியும், சமூக செயற்பாட்டளருமான, அன்புத் தம்பி குருபரன், பல்கலைக்கழகப் பதவியை துறக்கும் முடிவு மனவேதனையைத் தருகிறது.

பல்கலைக்கழகத்தில் கற்பித்துக் கொண்டே, நீதிமன்றங்களில் வழக்காட முடியாது என்று ஸ்ரீலங்கா அரசின் பல்கலைக்க






ழக மானியங்கள் ஆணைக்குழு [UGC] விடுத்த பணிப்புரையை எதிர்த்துத் குருபரன் தாக்கல் செய்த வழக்கு பிற்போடப்பட்டுக் கொண்டே இருந்ததன் விளைவாக ஏற்பட்ட விரக்தியின் விளைவே குருபரனின் இந்த முடிவு. 1996ல் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் காணாமால் ஆக்கப்பட்டோர் சம்பந்தமாக நடந்த ஆட்கொணர்வு மனுவில், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்ப்பாக வழக்காடிய குருபரனிற்கு, அவர் வழக்காடுவதைத் தடுக்க ஸ்ரீலங்கா அரசு விதித்த தடையாகவே UGC யின் பணிப்புரை பார்க்கப்பட வேண்டும்.

2017ல், UGC இந்தப் பணிப்புரையை விடுக்கும் போது, ஆட்சியில் இருந்தது ரணில்–மைத்ரியின் நல்லாட்சி என்பதும் கவனிக்கத்தக்கது. ஜெனிவா வரை சென்று, கலப்பு செயன்முறையின் அடிப்படையில், நடந்த அநியாயங்களிற்கு நீதி வழங்குவோம் என்று மீண்டும் மீண்டும் வாக்குறுதிகள் அளித்து விட்டு வந்த அரசே, யாழ்ப்பாணத்தில் ஒரு இளம் வழக்கறிஞரை சிறிலங்கா நீதிமன்றத்தில் தனது இனத்துக்காக நீதி கேட்டு வழக்காட முட்டுக்கட்டைப் போட்டது.

கொழும்பு பல்கலைக்கழத்தில் தனது LLBI முடித்து விட்டு, Oxford பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படித்து விட்டு, நாடு திரும்பி, தனது இனத்திற்கு சேவையாற்ற, பல்கலைக்கழக விரிவுரையாளராக இணைந்து படிப்படியாக உயர்ந்து, சட்டத்திறை பீடாதிபதியாக திகழும் துடிப்புள்ள இளைஞனை பேரினவாத அரசு அடக்கி ஒடுக்க துணைபோனதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் பாரிய பங்குண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை மீண்டும் முன்னையமாட்சிமைக்கு கொண்டுவரக் கூடிய ஆளுமைகளில் ஒருவராக நோக்கப்பட்ட குருபரனின் விலகல், யாழ்ப்பாண கல்விச் சமூகத்திற்கே பின்னனடைவு தான்.

வழக்கில் தோன்றிய இரு நீதிபதிகள் தாங்கள் குருபரனின் பக்கம் நியாயத்தை ஏற்று பகிரங்கமாகவே முன்னர் கருத்து தெரிவித்திருந்ததால், conflict of interest கருதி, குருவின் வழக்கில் இருந்து விலகியிருத்தார்கள். குருவிற்காக வழக்காடுவதோ இலங்கையின் தலைசிறந்த வக்கீல்களில் ஒருவரான கனகீஸ்வரன்.

வழக்கின் முடிவு வரமுதல், வழக்கு பிற்போடப்பட்டிருக்கும் சூழ்நிலையில், தம்பி குருபரனின் முடிவு பொறுமையிழந்து விரக்தியில் எடுக்கப்பட்ட முடிவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. தம்பி குருவின் முடிவால் பாதிக்கப்படுவது யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் எங்கள் இனமும் தான்.

தம்பி குருபரன், தனது UGC ற்கு எதிரான வழக்கைத் தொடர்ந்து நடாத்த வேண்டும், அவர் அதில் வெற்றி பெற்று, அவர் சமூக நலன் சார்ந்த வழக்குகளில் வழக்காட எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி, குரு மீண்டும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மீள வேண்டும் என்பதே எங்கள் எல்லோரதும் விருப்பமும் நம்பிக்கையும்.



## இரவுதான் பல தவறுகளுக்கு காரணமாக இருக்கிறது

1. ஏதாவது ஒன்றின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வையுங்கள். அது கடவுளாகவோ அல்லது இயற்கையாகவோ அல்லது உழைப்பாகவோ இருக்கலாம்.

2. ஒரு மாறுதலுக்கு அப்பா, அம்மா கொடுக்கும் வேலைகளில் ஏதாவதை செய்து பாருங்கள். மிகவும் கடினமான வேலையாக நிச்சயம் இருக்காது.

3. மூன்று மணி மேட்னி ஷோ போகதீர்கள். படிப்பு கெடும். தலையை வலிக்கும். பொய் சொல்ல கஷ்டமாக இருக்கும்.



அமரர் சுஜாதா

4. தினமும் நாலு பக்கமாவது படியுங்கள், காதல், கதை தவிர்த்து.

5. ஐந்து ரூபாயாவது சம்பாதிக்க முயற்சி செய்து பாருங்கள்.

6. உங்களுக்கு கீழே உள்ள மக்களை பற்றி கொஞ்ச நேரமாவது சிந்தியுங்கள்.

7. ஞாயிறு – பெற்றோர்களோடு செலவழிக்கும் தினமாக இருக்கட்டும்.

8. எட்டு முறையாவது ஒரு கிரவுண்டை சுற்றி வாருங்கள். கம்ப்யூட்டர் கேம்ஸ் வேண்டாம். வியர்வை சிந்த விளையாடினால் நல்ல தூக்கம் வரும்.

9. ஒன்பது மணிக்குள் வீட்டுக்கு வந்து விடுங்கள். இரவுதான் பல தவறுகளுக்கு காரணமாக இருக்கிறது.

10. ஒரு நாளில் பத்து நிமிடமாவது குடும்ப உறுப்பினர்கள் யாரோடாவது அரட்டை அடியுங்கள்.

இதில் ஏதாவது ஒன்றை தினம் செய்து வாருங்கள். உங்கள் தாய்/தகப்பனார் உங்களை பற்றி குற்றம்/குறை சொல்வதை படிப்படியாக குறைத்து விடுவார்கள். நீங்களும் நிம்மதியாக இருப்பீர்கள்.




# யேர்மனியில் மிகப்பெரிய விண்கல்!

## முகவரி விரைவில் தெரியவரும்!



இந்தஉலகத்திற்குவெளியே ஒரு விண் கல் கண்டுபிடிப்பு. ஒரு தோட்டத்தைத் தோண்டப்பட்டபொழுது பல தசாப்தங்களாக உறங்கிக்கிடந்த விண்கல் ஒன்று முதன்முதலில் (1989 இல் ) கண்டுபிடிக்கப்பட்டது. வீட்டு தோட்ட உரிமையாளர் அந்த அசாதாரண பாறையை, ஆராய்ச்சியாளர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்பு வரை, அது வெறும் கல்லாகவே கருதப்பட்டது.

யேர்மனியில் தரையிறங்கிய மிகப்பெரிய விண்கல் இது எனக் கண்டுபிடிக்கப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் (16.07.2020) புதன்கிழமை அறிவித்தனர்.

யேர்மனி விண்வெளி மையத்தின் (டி.எல்.ஆர்) அறிக்கையின்படி, இந்த விண்கல் யேர்மனி தென்மேற்கு நகரமான (Blaubeuren) இல் ஒரு வீட்டுத் தோட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டது.

'இந்த கண்டுபிடிப்பு 30.26 கிலோகிராம் 66.7 பவுண்டுகள் கொண்டது, இது யேர்மனியில் இதுவரை கண்டிராத மிகப்பெரிய விண்கல் ஆகும்' என்று விண்கல் நிபுணர் டைட்டர் ஹெய்ன்லின் கூறினார்.

Blaubeuren நகரினில் வசிக்கும் அவரது தோட்டத்தில் அசைக்க முடியாத, ஆனால் அசாதாரணமான பாறை தோண்டப்பட்டது. பாறையைத் தோண்டும்போது, அக்கற்பாறை நம்பமுடியாத அளவிற்கு கனமானது என்பதைக் கவனித்தார், மேலும் அதனில் (high iron content) இரும்புச் செறிவு கூடியதாக இருந்ததைக்கவனித்தார்.

ஆனால் அதற்கு மேல் எதுவும் செய்யவில்லை. பின்னர் விண்கல் கவனிக்கப்படாமல் தோட்டத்தில் பல தசாப்தங்களாக அங்கேயே இருந்தது.

'ஒரு தொழில்முறை நிபுணர் இக்கல்லை அன்று கண்டிருந்தால்கூட இது ஒரு விண்கல் என்று யூகித்திருக்க மாட்டார்' என்று டி.எல்.ஆர் ஒரு அறிக்கையில் கூறினார்.

2015 ஆம் ஆண்டில், வீட்டு உரிமையாளர் விண்கற்களை மற்ற தோட்டக் கழிவுகளுடன் தூக்கி எறிந்தார், ஆனால் கடைசி நொடியில் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டார். இந்த ஆண்டு 2020 ஜனவரியில் டி.எல். ஆரைத் தொடர்புகொளும் வரை அவர் அக்கல்லை பல ஆண்டுகளாக ஒரு இடத்தில் கவனமாகவைத்திருந்தார்.

மூன்று ஆய்வகங்களில் நடந்த சோதனைகளின் பின்னர்,தோட்டப் பாறை உண்மையில் ஒரு விண்கல் என்பதை உறுதிப்படுத்தியது. விஞ்ஞானிகள் இப்போது பூமியில் எப்போது அக்கல் விழுந்திருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கல் கண்டுபிடிப்பதற்கு முன்வரை, 'பெந்துல்லன்' என்று அழைக்கப்படும் ஒரு விண்கல் யேர்மனியில் 17.25 கிலோகிராம் (38 பவுண்டுகள்-pounds) எடையுள்ளதாக ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு இருந்தது.

புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட விண்கல் அந்த நகரத்தின் பெயரால் Blaubeuren 'ப்ளூபூரன்' என்று அழைக்கப்படுகிறது. விரைவில் எங்கிருந்து வந்தது என அக்கல்லின் முகவரி அறியவரும்.










விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# ஈழத்து வணிகனின் நன்கொடை பற்றி சேரநாட்டு செப்பேடுகள் செப்புகின்றன!

தனசேகர் பிரபாகரன்

இயற்கை அழகிலும், உணவு முறைகளிலும் இன்னும் சிலவழக்கங்களாலும் சேரநாடும் ஈழநாடும் சில ஒற்றுமைகளைப் பெற்றிருக்கின்றன. சேர நாடு வேழமுடைத்து என்பர் அதுபோலவே மலைகளும் யானைகளும் நிறைந்தது ஈழ நாடு. கடற்கரையும் அப்புறத்தே வானளாவிய மலைகளும் காடுகளும் கொண்டது கேரளம் அதுபோலவே கடல் சூழ்ந்து மத்தியில் பெரிய மலைகளும் காடுகளும் கொண்டது ஈழம்.

ஆப்பமும் பிட்டும் தேங்காயும் கேரளத்தை யாழ்ப்பாணத்தின் அடுத்த வீடு போலே காட்டும். பேசும் தமிழில் பழந்தமிழின் அழகிய சொற்களை இன்றும் பேணிவரும் பெருமையும் ஈழத்தமிழுக்கும், பழைய மலையாளமென்னும் கொடுந்தமிழுக்கும் உண்டு.

அப்படி ஒரு அழகான சேரநாட்டு ஈழநாட்டுத் தொடர்பை ஆயிரமாண்டு பழமையான செப்பேடு ஒன்று சொல்லுகிறது. ஈழம் என்ற சொல்லின் பயன்பாட்டுக்கு ஒரு ஆதாரமாகத் திகழ்வதும் இந்த செப்பேடு தான்.

திருவல்லா எனும் திருவல்லவாழ் சேரஃ மலைநாட்டில் ஆழ்வார்கள் பாடிப்பரவிய ஊர்களில் ஒன்று, இன்றைய கேரளத்தின் பத்தனம்திட்டாவிற்கு அருகே அமைந்த ஊர். இவ்வூரில் திருமாலுக்கு சிறப்பாய் கோவிலொன்று இருக்கிறது, வல்லபன் என்ற பெயரோடு திருமால் எழுந்தருளியிருக்கும் இக்கோவில் நம்மாழ்வாராலும் திருமங்கை மன்னனாலும் பாடல் பெற்றது !

> பச்சிலை நீள் கமுகும் பலவும்
> தெங்கும் வாழைகளும்
> மச்சு அணி மாடங்கள் மீது அணவும்
> தண சூதிருவல்லவாழ் (நம்மாழ்வார்)

இந்த கோவிலுக்கு தொடர்புடைய செப்பேடு திருவனந்தபுரம் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது. மொத்தம் 44 ஏடுகளை கொண்டுள்ளது இது, இதன் காலம் 10-11 ஆம் நூற்றாண்டாக கருதப்பெறுகிறது.

வட்டெழுத்து கிரந்த எழுத்துக்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. செப்பேடுகள் கோவிலுக்கு பல்வேறு காலகட்டத்தில் கொடுக்கப்பட்ட கொடைகள், அவற்றை கொடுத்தோர், அவர்களின் ஊர், கோயில் விழாக்கள் என பல தகவல்களைத் தருகிறது.



அவற்றில் ஒரு அழகான குறிப்பு ஈழத்தில் இருந்து வந்த வணிகன் அமுது செய்ய கொடுத்த கொடை, இதன் வரிகள்

"....இ(ஈ)ழத்து நின்று வந்த வாணியன் பள்ளத்து பொக் கொவிந்நன் கையில் திருவமிர்தினு கொடுத்த..."



இந்தக் கோவில் அக்காலத்தில் பெரும் புகழ் பெற்றிருந்திருக்கிறது அதே போல் வாணிபத்தில் சிறந்து விளங்கிய சேரநாடு பல நாடுகளில் இருந்து வரும் வணிகர்களுக்கு சிறந்த வாணிபத்தலமாகவும் விளங்கிவந்தது. இதே போல ஈழ நாடும் வாணிபத்தில் சிறந்து விளங்கிவந்துள்ளது. அப்படி ஈழ நாட்டிலிருந்து வந்திருந்த வாணியன் ஒருவன் கோவில் திருவமுது எனும் ப்ரசாதத்திற்கு பள்ளத்து கோவிந்தன் என்பவரிடம் கொடுத்த பணத்தைப் பற்றிய குறிப்பு குறிக்கப்பட்டுள்ளது.

ஈழத்திலிருந்து கேரளத்திற்கு வருவதும், கோவில்களை தரிசிப்பதும் இந்த செப்பேட்டுக் காலத்துக்கு முன்னரே தொடங்கிவிட்டது. சுமார் இரண்டாம் நூற்றாண்டளவிலேயே கயவாகு மன்னன் சேரநாடு வந்ததை சிலப்பதிகாரம் சொல்லும்.

> "குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
> கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்
> எந்நாட் டாங்கண் இமய வரம்பனின்
> நன்னாட் செய்த நாளணி வேள்வியில்"

சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவின் அண்ணன் சேரன் செங்குட்டுவன் தமிழரை அவமதித்த வடபுல மன்னர்களும் கனக விசையரை வெல்ல படையெடுத்துச்சென்றான். அவரைகளை வென்று இமயத்தில் கல் எடுத்து கங்கையில் நீராட்டி தோற்ற மன்னர்களின் தலைமீதே அதனை சுமத்தி வஞ்சிமா நகர் கொண்டு வந்து பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்கு கோவில் எடுத்து சிலையும் நாட்டினான். அங்கே அப்போது பல நாட்டு மன்னர்களும் வந்திருந்தனர் அவர்களுள் கடல் சூழ்ந்த இலங்கையின் கயவாகுவும் ஒருவர். இவரே ஈழத்திற்கு பத்தினி வழிப்பாட்டை எடுத்துச்சென்றவர்.

இப்படி உணவுமுறை, இயற்கை அழகு, அழகான சொற்கள் கலந்த பேச்சால் மட்டும் ஈழமும் சேரநாடும் தொடர்புடையவை அல்ல, காலங்கள் கடந்த பயணங்களிலும், வாணிபங்களாலும் தான்.



வரி 99:...வீரசொழ ரமைச்ச திருவிளக்கொன்றினு...

வரி 102: சென்னித்தலை அடிக ளிராய செகரனமைச்ச திருவிளக்கொன்றினு..




BCN TRAVELS
Consulting Network.ug
RYANAIR easyJet KLM Emirates AIR CANADA SINGAPORE AIRLINES QANTAS
NEC MONEY ACE money transfer small world VALUTRANS Ria Money Transfer
துரிதகதியில் உங்கள்
உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு
பணம் அனுப்ப உடன் நாடுங்கள்
(இலங்கை- இந்தியா)
Rheinische str-72 44137 Dortmund
bcntravels@hotmail.de
consultingnetwork@hotmail.de
Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 | Fax: 0231 108 763 62 | Mobile:0163- 871 43 69

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# இராவணனின் புஷ்பக விமானம்; தேடும் ஆராய்ச்சியை ஆரம்பித்தது இலங்கை!!!



இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்து இலங்கை அரசாங்கம் பத்திரிகை விளம்பரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்த விளம்பரத்தை சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு வெளியிட்டுள்ளதாக நியூஸ் 18 தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு இலங்கை மன்னனான இராவணன் மற்றும் நாட்டின் விமான போக்குவரத்து வரலாறு குறித்து விரிவான ஆராய்ச்சி நடத்த விரும்புவதாக கூறப்படுகிறது. இராவண மன்னன் மற்றும் இப்போது இழந்த வான்வழி பாதைகளில் பண்டைய ஆதிக்கம் குறித்த ஆராய்ச்சி திட்டத்தைத் இலங்கையின் சிவில் விமானசேவை அதிகாரசபை தொடங்குகிறது. அந்த அறிக்கையின் பிரகாரம்,5000 ஆண்டுகளுக்கு முன்பு இராவணன் விமானத்தில் பறந்து விட்டதாகவும், உலகின் முதல் விமானி என்றும் இலங்கை நம்புகிறது. பண்டைய காலகட்டத்தில் பறக்கப் பயன்படும் முறைகளைக் கண்டறிய நாடு இப்போது ஆர்வமாக உள்ளது. ஆராய்ச்சியின் முதல் கட்டமாக,இராவணன் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்கள் மற்றும் பிற வரலாற்று உள்ளடக்கங்களை சேகரிக்கத் தொடங்கியுள்ளது.



விமானத்தை பறக்கவிட்ட முதலாவது ஆள் இராவணன் என்பதை நிரூபிக்க அரசாங்கத்திற்கு ‘மறுக்கமுடியாத உண்மைகள்’ இருப்பதாகத் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் முன்னாள் துணைத் தலைவர் சஷி தனதுங்க, தெரிவித்தார். இராவண மன்னன் ஒரு மேதை. அவர் தான் முதலில் பறந்தார். அவர் ஒரு விமானியாக இருந்தார். இது ஐதீக கதை அல்ல. இது ஒரு உண்மை. இது குறித்து விரிவான ஆராய்ச்சி இருக்க வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளில், இதை நாங்கள் நிரூபிப்போம், என்று அவர் கூறியதாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

இலங்கை அரசு ‘இந்திய தரப்பு கருத்தை’நிராகரிக்கிறது.

இராவணனை ஒரு கொடுங்கோலனாக பார்க்கும் இந்தியாவைப் போலல்லாமல், இலங்கை இராவணனை ஒரு அறிஞராகவும், கனிவான ஆட்சியாளராகவும் பாராட்டுகிறது. அவர் சீதையை கடத்திச் சென்றார் என்பதை அவர்கள் நிராகரித்து, அதனை இராவணன் தொடர்பான ‘இந்திய தரப்பு கருத்து என்று முத்திரை குத்துகிறார்கள். பல இந்திய வேதங்கள் இலங்கையின் ஆட்சியாளரை ‘மகா பிராமணர்’ அல்லது பெரிய பிராமணர் என்று குறிப்பிடுகின்றன.

சமீபத்தில், இலங்கை தனது முதல் விண்வெளி பயணத்தின் ஒரு பகுதியாக விண்வெளியில் ஒரு செயற்கைக்கோளை ஏவியது. இந்த செயற்கைக்கோளுக்கு ‘இராவணன்’ என்று பெயரிடப்பட்டது. கடந்த ஆண்டு கட்டுநாயக்கவில் நடந்த ஒரு மாநாட்டில், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர்கள், விஞ்ஞானிகள், வல்லுநர்கள் மற்றும் புவியியலாளர்கள் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு விமானம் பறந்ததாக முடிவு செய்தனர்.

இராமாயணத்தைப் பொறுத்தவரை, இராவணன் புஸ்பக என்ற விமானத்தைப் பயன்படுத்தினான், அதை விஸ்வகர்மா நிர்மாணித்தான்.இதிகாசத்தின் பிரகாரம் சீதையைக் கடத்திச் சென்றபோது இராவணன் விமானத்தைப் பயன்படுத்தியிருந்தான் நன்றி.தினக்குரல்

### பின் குறிப்பு

*இன்று எமது தாயகத்தில் அகழ்வாராட்சி என்பது பௌத்த சின்னங்கள் எதுவும் கிட்டும் வரை தேடுதல் என்பதே பொருளாகிறது. எனவே இன்று இராவணன் விமானத்தை தேடப் புறப்பட்டவர்கள், திரும்பும்போது வெறும் கையுடன் திரும்ப மட்டார்கள். 5000 ஆண்டு பழமைவாய்ந்த பௌத்த சமையல் உபகரணங்கள் கிடைத்தன என்றும், அதே நேரம் விமானி இராவணன் என்றும். அதனை வடிவமைத்த பெரும் விஞ்ஞானி பௌத்தம் என்று பிதற்றும் வேலை தொடரலாம். பழைய புத்தகங்களைத் தேடி எடுத்து தமிழர் நீண்டகாலம் வாழ்ந்தமைக்கான வரலாற்று பின்னணிகளை அறியும் வேளை, அவற்றை ஒட்ட நறுக்கும் வேலையிலும் ஈடுபடலாம். எது எப்படி இருந்தாலும் இராவணனின் விமான பைலட் (லைசன்ஸ்) சான்றிதழ் புதுப்பிக்கப்படமாட்டாது.*










# முயல் மட்டுமா செத்தது? காதலும் தான்!

மங்கை அரசி

சூரியன் மறைந்து இருள் பரவத் தொடங்கிவிட்டது. வீதியில் விளக்குகள்கூட மங்கலாக தூரம் ஒன்று என்ற ரீதியில் அழுது வடிந்து கொண்டிருந்தது. அது ஒரு காட்டுப் பகுதியின் ஊடாக உள்ள ஒரு வீதி, சுதர்சன் உற்சாகமாக கார் ஓடிக்கொண்டிருந்தான். அருகில் அவனுடைய அன்பு மனைவி, சினிமா பாடலை ரசித்தவண்ணம் கண்மூடி பாடலுடன் தானும் சேர்ந்து மெதுவாக பாடிக்கொண்டிருந்தாள்.

சுதர்சன் கடைக்கண்ணால் மனைவியைப் பார்த்தான், சுமதி அழகான பெண், அறிவுடன் கூடிய அமைதியான பெண், சுதர்சனும் சுமதியும் இணைபிரியாத தம்பதியர்கள். ஆதர்ச தம்பதியர்கள் என்று நட்பு வட்டாரத்தில் பேசப்பட்டார்கள். அவன் தன் மனைவியிடம் கோபமாக என்றுமே நடந்து கொண்டதில்லை. சுமதியும் ஒரு தடவை கூட தன் கணவனை எதிர்த்து கதைத்திருக்கமாட்டாள். சுதர்சனின் எண்ணங்கள் அவனது காதல் மனைவியை சுற்றி வட்டமிட்டது. அவன் ஒரு அலுவலகத்தில் பெரிய பதவியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். சுமதியும் வேலை பார்த்த பெண்தான், திருமணத்தின் பின் கணவனின் வேண்டுகோளிற்கிணங்க வேலைக்குப் போவதை நிறுத்திவிட்டாள். வீட்டிலேயே அவனுடைய நோய்வாய்ப்பட்ட பெற்றோரை கவனித்துக்கொண்டு, வீட்டு நிர்வாகத்தையும் திறம்பட நடத்திவந்தாள். வீட்டு வேலைகள் செய்ய வேலைக்காரர்கள் இருப்பதினால் அவளுக்கு எந்தவித சிரமமும் இருக்கவில்லை. மாலை வேளையில் கோவில், பீச், ஷாப்பிங் என்று சுற்றி வருவார்கள். வார விடுமுறையில் கொஞ்சம் தூரமான இடங்களுக்கு சுற்றுலா செல்வார்கள். அவர்களைப் பொறுத்தவரை வாழ்க்கை என்பது ஒரு வசந்தமாக பூத்துக் குலுங்கியது அன்றும் ஒரு வார விடுமுறை நாள்தான், அவர்கள் ஒரு பயணம் புறப்பட்டு இருந்தார்கள்.

காட்டின் ஊடாக அமைக்கப்பட்ட வீதியினூடாக காரில் சென்று கொண்டிருந்தனர், வீதியில் அவர்களுடைய கார் மட்டும்தான் ஓடிக்கொண்டிருந்தது. திடீரென சுதர்சன் பிரேக் போட்டு காரை நிறுத்தினான், என்னவெனச் சுமதியும் கண்களாலேயே



வினவினாள்! முயல் ஒன்று அடிபட்டுவிட்டது, என்று சொன்னபடியே அவன் கீழே இறங்கினான். சுமதியும் கீழே இறங்கினாள், முயல் இறந்தபடி கார் முன்னே கிடந்தது. இது முதலிலேயே இறந்துபோன முயல் போன்று இருக்கின்றது. யாரோ காரின் முன்னே வீசியது போல் அல்லவா இருக்கின்றது. தனக்குள்ளேயே அவன் சொல்லிக்கொண்டான் அப்போது அங்கு ஒரு மனிதன் வந்தான். என்ன விஷயம்? என்ன நடந்தது? என வினாவியபடி வந்த அவன் சுதர்சன் உடன் கதைத்துக் கொண்டிருந்தான். அவனின் பார்வை சுமதி பக்கம் பார்க்கும் போது அசௌகரியமாக இருப்பது போன்று சுமதி உணர்ந்தாள். சுதர்சனும் அவ்வாறே உணர்ந்ததால், காரின் உள்ளே போய் அமரும்படி கண்ஜாடை காட்டினான். அதன்படி அவளும் உள்ளே போய் அமர்ந்து கொண்டாள். அந்த மனிதனிற்கு அந்த நிகழ்வு பிடிக்கவில்லை. அவனுடைய குரலில் ஏற்றம் இருந்தது, கோபம் கொப்பளித்தது, இருவருக்குள்ளும் வார்த்தைகள் தடித்தன, கைகலப்பு ஏற்பட்டது சுமதி பயந்தாள், கணவனை வந்து காரில் ஏறும்படி சத்தமாக கத்தினாள். ஆனால் நடந்தது வேறு விதமாக இருந்தது, மிகவும் பயங்கரமாக இருந்தது, கண்சிமிட்டும் நேரத்தில் அவன் சுதர்சனை தள்ளி விழுத்திவிட்டு, காரில் ஏறி டிரைவர் சீட்டில் இருந்து உள்பூட்டுப் போட்டுப் பூட்டிக் கொண்டான். நடந்த விபரீதத்தை சுமதி பின்புதான் புரிந்துகொண்டாள் அவளால் இறங்கி வெளியில் செல்ல முடியாமல் உள் பூட்டு போடப்பட்டு இருப்பதை உணர்ந்தாள்.

அவள் என்னதான் சத்தம் போட்ட போதும் எந்த சத்தமும் வெளியில் கேட்கவில்லை. கார் கண்ணாடியை அடித்தாள், எதுவும் முடியவில்லை. வந்தவனை தாக்க முயற்சித்தாள், காருக்குள் இருந்த அவன் சுமதியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான், சுமதி குருவிக் குஞ்சைப்போல் அடங்கி ஒடுங்கி விட்டாள். வெளியில் இருக்கும் சுதர்சனால் எதுவும் செய்ய முடியவில்லை. போனை காருக்குள் வைத்து விட்டு இறங்கிவிட்டான், அதனால் யாருக்கும் தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்தி உதவியும் கேட்கமுடியவில்லை. அடர்ந்த இருளில் உள்ளே என்ன நடக்கின்றது என்றும் தெரியவில்லை. கார் கண்ணாடியை உடைத்து விடலாம் என்றால், அவன் கை கால்கள் நடுங்கின, வந்திருப்பவன் முரடன், அவனுடன் சண்டை செய்யக்கூடிய தைரியம் தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்தான். தாங்கள் இரண்டு பேர் இருப்பதனால் அவன் ஒருவன்தானே அவனை எப்படியும் சமாளிக்கலாம் என்றாலும், தான் ஆண்! தன்னாலேயே முடியவில்லை என்றால், மனைவி மட்டும் எப்படி துணிவாக

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# இலங்கையில் பெண்களைவிட ஆண்களே உப்புப் பிரியர்கள்!!!



### உப்பு அதிகரித்தால் நோய்கள் வரும். உப்பு இல்லாவிட்டால் ?

எமது பண்பாட்டில் உப்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதனால் தாய்மொழியில் பழமொழிகளும் வாய் மொழிகளும் உப்பைப் பற்றிப் பரவலாகப் பேசுகின்றன.

'உப்பிட்டவரைஉள்ளவும்நினை..', 'உப்பிலாப் பண்டம் குப்பையிலே..', 'உப்புச் சப்பில்லாத விடயம்..' இவ்வாறு பல.

### எமது உணவில் உப்பு

மொழி மத வேறுபாடுகளைக் கடந்து இலங்கையர்களான நாம் அனைவருமே உப்புப் பிரியர்களாக இருக்கிறோம். தினசரி உட்கொள்ளக் கூடிய உப்பின் அளவானது 3.75 முதல் 5 கிராம் மட்டுமே இருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தபோதும் நாங்கள் 12.5 கிராம் வரை உட்கொள்கிறோம். இலங்கையில் ஆண்கள் பெண்களைவிட அதிகமாக உப்பை உட்கொள்கிறார்கள் என இலங்கை சுகாதார அமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவித்திருப்பதை இவ்விடத்தில் ஞாபகப்படுத்தலாம்.

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

அதிலும் முக்கியமாக 20 முதல் 60 வயதுவரையான ஆண்கள், அவர்கள் நகர்புறத்தைச் சார்ந்தவர்களானாலும் சரி கிராமங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி அதிகமாக உப்பை உள்ளெடுக்கிறார்களாம்.

சோற்றுக்கு உப்புப் போட்டுச் சமைப்பதும், கறிகளுக்கு உப்பும் உறைப்பும் செழிக்கப் போடுவதும் எமது தேசத்தின் பழக்கம். அதற்கு மேல் கடையில் வாங்கும் துரித உணவுகள் உப்பைத் தாராளமாகக் கொட்டித் தயாரிக்கப்படுகின்றன.

கிழக்கு ஆசிய நாட்டவர்களான நாம் மேலைத் தேசத்தவர்களை விட அதிகம் உப்பை உண்கிறோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. உப்பு என்பது யேஊட. அதிலுள்ள சோடியம் (Na) எனும் கனிமம்தான் பாதகங்களுக்கு முக்கிய பங்களிக்கிறது

### அதிக உப்பின் பாதக விளைவுகள்

உப்பை அதிகம் உட்கொண்டால் பிரஷர் வரும், ஏற்கனவே பிரஷர் உள்ளவர்களுக்கு மேலும் அதிகரிக்கும் என்பது எல்லோருக்குமே தெரிந்த செய்திதான். அதே நேரம் தினசரி 12 கிராம் உப்பை உட்கொண்டவர் அதனை 3 கிராம் ஆகக் குறைத்தால் பிரசரானது 3.6 முதல் 5.6 ஆல் குறையும் என ஆய்வுகள் சொல்லுகின்றன.



ஆனால் அதிக உப்பானது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் வருவதற்கான சாத்தியத்தையும் அதிகரிக்கும் என்பது பலரும் அறியாத செய்தியாக இருக்கலாம்.

உப்பு அதிகரிப்பதால் பிரஷர் அதிகரிக்கும். அதனால்த்தான் மாரடைப்பு பக்கவாதம் ஆகியன வரும் என நீங்கள் எண்ணலாம். ஆனால் பிரஸர் அதிகரிப்பதால் மட்டும் இவ் ஆபத்துக்கள் வருவதில்லை. அதீத உப்பு நேரடியாகவே இரத்தக் குழாய்களிலும், இருதயத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தி மாரடைப்பையும் பக்கவாதத்தையும் கொண்டு வரும் என்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

ஆனால் உட்கொள்ளும் உப்பின் அளவை 12 கிராமிலிருந்து 3 கிராம் ஆகக் குறைத்தால் பக்கவாதம் வருவதற்கான சாத்தியம் நாலில் ஒரு பங்காலும், இருதய நோய்கள் வருவதற்கான சாத்தியம் மூன்றில் ஒரு பங்காலும் குறையும் என்ற நல்ல செய்தியையும் ஆய்வுகள் கூறுகின்றன.

அதீத உடல் எடைக்கு தவறான உணவு முறைதான் காரணம் என்ற போதும் கூடுதலாக உப்பு உட்கொள்வதும் ஒரு காரணமாகும். எண்ணெய். கொழும்பு, இனிப்பு மற்றும் மாப் பொருட்களை அதிகம் உட்கொள்வதே தவறான உணவு முறை என நாம் பொதுவாகக் கருதினாலும் அதிகமாக உப்பை உட்கொள்வதும் அதில் சேர்த்தியே.

உப்பை அதிகம் சேர்த்தால் தாகம் அதிகமாகும். தாகம் அதிகமாதால் இனிப்புள்ள பானங்களை அடிக்கடி அருந்துவம் எடை அதிகரிப்பிற்கு ஒரு காரணமாகிறது. முக்கியமாக குழந்தைகள் நொறுக்குத் தீனிகளை அடிக்கடி சாப்பிடுகிறார்கள். இவற்றில் உப்பு அதிகம். இதனால் ஏற்படும்தாகத்தைத் தணிக்க மென் பானங்களையும் இனிப்புள்ள ஜீஸ் வகைகளையம் குடிக்கிறார்கள். இதானால் எடை அதிகரித்து குழந்தைகள் குண்டாகிறார்கள்.

'இவன் சாப்பிடுறதே இல்லை ஆனால் குண்டாகிறான்' என அம்மாமார் சொல்வதுண்டு. அதற்கான காரணம் இப்பொழுது புரிகிறது அல்லவா?

இரைப்பை புற்றுநோய்,ஒஸ்டியோபொரோசிஸ்,சிறுநீரகக் கற்கள்,ஆஸ்த்மா பாதிப்பு தீவிரமடைதல் போன்ற பல பிரச்சனைகளுக்கும் உப்பு காரணமாக இருக்கிறது என்பதை மறக்காதீர்கள்.

### மறைந்திருக்கும் உப்பு உணவுகள்

'இவருக்கு பிரஷர் என்றபடியால் நான் உப்போ போட்டு சமைப்பதில்லை' என்றார் ஒரு இல்லத்தரசி. அவ்வாறு சமைப்பது நல்லதா கூடாதா என்பதையிட்டு பிறகு பார்க்கலாம்.

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# தமிழன் என்கிற திமிரு எனக்கும் உண்டு

ஒரு தடவை சென்னை திருவல்லிக்கேணிக்கு வந்திருந்தாராம் காந்தி.பொதுக்கூட்டத்தில் பேசிய அவரது பேச்சு முழுக்க ஆங்கிலத்தில் இருந்திருக்கிறது . அதைக் கேள்விப்பட்ட பாரதி, காந்திஜிக்கு உடனே ஒரு கடிதம் எழுதினார் .

உங்களுடைய மேடைப் பேச்சு உங்கள் தாய்மொழியான குஜராத்தியில் அமைந்திருக்கலாம். இல்லையென்றால் இந்தியாவின் ஏதாவது ஒரு மோழியில் அமைந்திருக்கலாம். ஆனால் அதையெல்லாம் விட்டுட்டு நாம் யாரை இந்த நாட்டை விட்டுத் துரத்த வேண்டுமென்று விரும்புகிறோமோ அவர்களுட [ஆங்கில ] மொழியிலேயே பேசினீர்களே ! என்று கடிதத்தில் வருத்தப்பட்டிருக்கிறார்.



இதைப் படித்த காந்தி சொன்னார். என் தவறை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் உங்களுடைய கடிதமும் ஆங்கிலத்தில் தானே இருக்கிறது. பாரதியும் விட்டுவிடவில்லை, தமிழ் மொழி மிகவும் இனிமையான மொழி. அந்த மொழியை என் தேசத்தந்தையைத் திட்டுவதற்கு ஒரு போதும் பயன்படுத்தமாட்டேன் என்றாராம் !

– **தமிழன் என்கிற திமிரு எனக்கும் உண்டு**




## கீரிமலை கேணியை கல்லால் கட்டிய பெரியவர்

**ஸ்ரீ**மான் வல்லிபுரம் என்ற பெருமைக்குரியவர் தனது சொந்தச் செலவில் இக்கேணியை கல்லால் கட்டியதாக 1924 இல் வெளிவந்த கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குளமாக இருந்த இவ்நன்னீர் ஊற்று இவரால் கற்படிகள் அமைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது. பின் பெண்கள் நீராட1924 இல் இருபிரிவாக கேணி மாற்றம் பெற்றுள்ளது. ஸ்ரீமான் வல்லிபுரம் அவர்கள் என்றும் வாழ்த்துக்குரியவர்.

நன்றி: தகவல் கலாநிதி ஆறு. திருமுருகன்

கடுகுமணி

## பிற நாட்டில் வாழ்பவர்களுக்கு ஒரு பழந்தமிழ் அறிவுறுத்தல்

நன்னன் என்னும் தமிழ் மன்னன் பெண் கொலை புரிந்தவன் என்று கூறும் வழக்கம் உண்டு. அது தொடர்பாக ஒரு செய்தி பண்டைத்தமிழ் இலக்கிய மரபிலே உண்டு. சேரநாட்டைச் சேரந்த ஒரு பெண் நன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட பூழி நாட்டுக்குச் சென்றாள். அங்கே ஓர் ஆற்றிலே அவள் நீராடும்போது ஒரு மாங்காய் ஆவ்வாற்றிலே மிதந்து வருவதைக் கண்டாள். கர்ப்பம் தரித்திருந்த அப்பெண் அந்த மாங்காயை உண்ணுதற்கு விருப்பமுடையவளானாள்.

ஆனால், அந்த ஆற்றிலே நீராடிக் கொண்டிருந்த அந்நாட்டுப் பெண்கள் அந்த மாங்காயை உண்ணவேண்டாம் என்று சேரநாட்டுப் பெண்ணைத் தடுத்தார்கள். அவர்கள் அவ்வாறு தடுத்ததற்குக் காரணம் இருந்தது. நன்னனுடைய காவற்காட்டு மாமரத்தின் காயை யாராவது உண்டால் அவர்கள் கொலைசெய்யப்படுவார்கள் என்று ஓர் அரச ஆணை அங்கிருந்தது. இதனைத் தெரிந்திருந்த அவ்வூர்ப் பெண்கள் நன்னனுடைய காவற்காட்டு மாங்காய் இதை உண்பவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று கூறி அப்பெண்ணைத் தடுத்தார்கள். ஆனால் அப்பெண் விருப்ப மிகுதியினாலே அக் காயினை உண்டாள்.

காவலர்கள் அவளை மன்னன்முன் நிறுத்தினார்கள். மன்னன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். இதனாலே நன்னனை பெண்கொலை புரிந்த நன்னன் என சேர மன்னர்களும் ஏனையோரும் கூறினர். பிற நாட்டுப் பெண் ஒருத்தி இத்தவறைச் செய்தாள் என்பதை அறிந்து அவளை நன்னன் மன்னித்துவிட் டிருக்கலாம் என வாதாடலாம். இச்செய்தி ஊடாக நமக்கு ஒரு நல்ல பாடம் புகட்டப்படுகின்றது. பிற நாட்டுக்குச் செல்பவர்கள் அந்நாட்டுச் சட்டங்களை அறிந்து அவற்றை மீறாமல் வாழவேண்டும்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

## கறுப்பு இனவாதம்;

# எமக்கும் அதில் பங்கு இருக்கிறது

**கறுப்பினத்தவர் வலியை அதிகம் தாங்குவார்கள் என்ற தவறான கருத்தால் அவர்கள் வலியை மருத்துவ துறையினர் உதாசீனம் செய்கிறார்கள்.**

மே மாதம், 25ம் திகதி அன்று Minnesota,US இல் கறுப்பினத்தவரான George Floyd கழுத்தின் மேல், கிட்டத்தட்ட 9 நிமிடங்களுக்கு ஒரு வெள்ளை இன காவல்துறை அதிகாரி, தன் முழங்காலை அழுத்திக்கொண்டிருந்தார். George 'என்னால் மூச்சு எடுக்க முடியவில்லை' என்று மீண்டும் மீண்டும் குரல் கொடுத்த பின்பும், பின் மூச்சிழந்துவிட்ட பின்னும், அழுத்திய முழங்காலை அந்த காவல்துறை அதிகாரி எடுக்கவில்லை. George இன் இறப்பு, காலம் காலமாக கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக நடக்கும் அநீதிக்கெதிரான புது போராட்டத்தை ஆரம்பித்துவிட்டிருக்கிறது.

இதில் கவனிக்கத்தக்க ஒரு விடயம்: கூட இருந்த ஆசிய இனத்தை சேர்ந்த காவல்துறை அதிகாரியின் பங்கு தான் அது. George இறக்கும் தறுவாயிலும் கூட, அந்த ஆசிய அதிகாரி விறைத்த நிலையில் நின்றார். அருகில் நின்றவர்கள் அந்த கொலையை தடுத்து நிறுத்தாமல் இருக்க காவல் நின்றார். இந்த காட்சி எம் ஆசிய இனத்தினை அப்படியே சித்தரிக்கும் ஒரு வரலாற்று சின்னமாக இருக்க போகிறது. இதற்கு நாம் என்ன செய்யமுடியும்? தமிழர்களாகிய நாம் இதை கேட்கலாம். அந்த ஆசிய அதிகாரியும் அப்படி தான் யோசித்திருப்பார். ஒரு பிழையை செய்பவர் மட்டுமல்ல, அதற்கு உடந்தையாக இருப்பவருக்கும் அந்த பிழையில் பங்கிருக்கிறது.

நாமே சிறுபான்மையினர், நம்மால் என்ன செய்யமுடியும் என நாம் கேட்கலாம். ஆனால் மேலை நாடெங்கும் நடக்கும் இஸ்லாமிய மற்றும் கறுப்பு




இனத்தவர்களுக்கு எதிரான பாரபட்சத்தால், நாம் கொஞ்சம் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறோம். எம்மை போன்ற ஆசிய இனத்தவருக்கு மாதிரி சிறுபான்மையினர், அதாவது model minority என்றொரு வறட்டு கௌரவத்தை பெரும்பான்மையினர் தந்திருக்கிறார்கள். மேலை நாடுகளில் வசிக்கும் ஆசிய நாட்டு மக்களை தான் பொதுவாக மாதிரி சிறுபான்மையினர் என்று அழைக்கிறார்கள்.

ஏனென்றால், ஆசிய நாட்டவர்கள் பொதுவாக கல்வி மற்றும் உழைப்பில் கவனம் செலுத்தி, முன்மாதிரியாகவும் சட்டத்துக்கு கட்டுப்பட்டும் நடக்கிறார்கள் என்ற மேலோட்டமான நம்பிக்கை தான் அது. இந்த ஒரு போலி கௌரவத்தை எமக்கு கொடுத்து, எம்மை எதையுமே தட்டிக் கேட்காதவாறு தக்கவைத்திருக்கிறார்கள் பெரும் பான்மையினர்.

Dr. Pushpa Kanagaratnam
Ph.D. C. Psych.
Clinical Psychologist



Passive என்ற ஆங்கில பதத்திற்கு, அகராதியில் 'செயலற்ற' என்று பொருள். அந்த பதத்திற்கு ஏற்றவாறு தான் தமிழர்கள் ஆகிய நாம் வாழ்கிறோமா? நிச்சயமாக, நம் எல்லோரையும் ஒரு இனமாக, ஒரே அளவுகோல் கொண்டு அளக்க முடியாது. அளக்கவும் கூடாது. சமூக விழிப்புணர்வும், அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கும் திறமையும் கொண்டவர்கள் நம் தமிழர் மத்தியில் இருக்கிறார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக, அவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவுக்கு தான் இருக்கிறார்கள்.

ஒரு நண்பர் சமூக ஆர்வலர் சொன்னது போல், ஈழப் போரைப் பற்றி நாம் பேசுவோம். ஆனால், போர் நமக்கு என்ன செய்தது என்பது பற்றி பேசமாட்டோம். போர் ஒன்று தான் எங்களை சற்றேனும் செயல்திறன் உள்ளவர்களாக கண்டிருக்கிறது. விரிசல்கள் மத்தியிலும் கூட, ஒரு மட்டத்தில் நம்மை இணைத்திருக்கிறது. போரை விடுத்துப் பார்த்தால், நாம் எதை பற்றி பேசுகிறோம்? போரில் எத்தனையோ அவலங்களை சந்தித்தோம். பிரிவுகள், சித்திரவதைகள், துரோகங்கள், பாலியல் வன்முறை! இது ஒன்றையும் பற்றி வாய்விட்டு பேச மாட்டோம்.

பேரப்பிள்ளைகளை கண்டபின்னும் தனக்கு நடந்த பாலியல் வன்முறையை மனதுக்குள்ளேயே சுமந்தவர், தம் பிள்ளைகளுக்குக் கூட அவர் இதை வெளிப்படுத்த முடியாத நிலை. அகதிகோரிக்கையில் பிரச்சனை வரலாம் என்ற ஒரே காரணத்தால், என்னிடம் வெளிப்படுத்தினார். அந்த பெண்ணுக்கு, நடந்த கொடுமையை வாய் திறந்து தமிழில் சொல்லவே சரியான சொல் பதம் தெரிந்திருக்கவில்லை. இப்படி எத்தனை



மௌன வடுக்கள்! போரில், காணாமல் போனோர் தாயாக, மனைவியாக, சகோதரியாக, அந்த நீதிக்காக எம் பெண்களால் போராட முடிகிறது. ஆனால், பாலியல் வன்முறைக்காக குரல் கொடுப்பது, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் போல் எம் சமூகத்தில் அங்கீகரிக்கப்படுமா?

பெண்கள் தினத்தில் என்னை பேச அழைக்கும் போது, பிள்ளை



வளர்ப்பு பற்றி அல்லது பிள்ளைகள் உளநலத்தை பற்றி பேச சொல்கிறார்கள். பெண்களை பற்றி பேச சொல்கிறார்கள் இல்லை. ஏன்?

பெண்ணியம் பற்றி பேசினால், எங்கே நம்மை ஒழுக்கம் அற்றவர்கள் என்று எண்ணிவிடுவார்களோ என பெண்கள் பயப்படுகிறார்கள். ஆண்களோ, பெண்களுக்காக பேசினால், தம்மை 'பெண்மைத் தன்மை' கொண்ட ஆண்கள் என்று மற்றவர்கள் நினைப்பார்களோ என்று பயப்படுகிறார்கள்.

சாதி வாதம் இப்பொழுதும் எம் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறது. அதை ஒரு விடயமாக நாம்

30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# முரண்பாடான குணங்களே முன் கதவைத் தட்டும்

## கருணையே கதவைத் திறக்கும்!

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். எல்லோருக்கும் அவரவர் அம்மா அழகாக தெரிவது அம்மாவின் அகம் பிள்ளைக்கு என்றும் பேரழகாக இருப்பதனாலேயே. அன்பென்ற ஒரு விடயம் ஏனைய விடையங்களையெல்லாம் அழகாக காட்டிவிடக்கூடியது. அன்பே அனைத்தும் என்பதை விட அன்பே சௌகரியமானது. அன்புள்ள இடம் பாதுகாப்பானது, அன்பு இருந்தாலே கருணை, இரக்கம், தியாகம் போன்ற நற்பண்புகள் மேலோங்கும்.

கருணை என்பது அந்த தன்மையோடு கரைந்து போதலாகும். அந்நிலையில் இறுக்கம் தளர்வு பெற்று உருக்கம் பிறந்துவிடும். எனவேதான் இரக்கத்தை உருக்கம் என்றனர். இது ஒருவரை அன்பு கொண்டவராக மட்டுமல்லாது முழுமையையும் அன்பாகவே மாற்றிவிடும்.

புதிதாக பிராணிகளை அணுகையில் அந்த பிராணிகளுக்கு நாம் மென்மையாக தடவிக் கொடுத்தோ அல்லது உணவு கொடுத்தோ எம் இயல்பை அதனோடு வெளிப்படுத்தியதும் அவை தம் பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே எம்மோடு ஒட்டி உறவாடும்.

நாம் பழகும் மனிதர்களினிடையே பணம் படைத்தவர்கள், நல்ல பதவி வகிப்பவர்கள், அல்லது மிக அருகில் வசிப்பவர்கள் என எத்தனை வகையானவர்கள் இருந்தாலும் எப்போதும் வெளிப்படையாக பேசிப்பழகும் அன்பானவர்களிடமே அன்னியோன்யம் அதிகரிப்பாகும். அவர்களையே நாடுவதோடு பாதுகாப்பான உறவாகவும் மனம் ஏற்றுக் கொள்ளும்.

பாடசாலையில் மிக கடினமாக வெறுப்போடு நடந்து கொள்ளும் ஆசியர் அந்த பாட வேளையில் வகுப்பிற்கு சமூகமளிக்கவில்லையெனில் மாணவர்கள் மிகவும் மகிழ்வோடு காணப்படுவார்கள். எவர் ஒருவரை கண்டு பயம் கொள்கிறோமோ அவர் இல்லாத போது அவரை வெறுக்கிறோம் என்பதே பொருள். அவர் இல்லாத இடத்தையே விரும்புகிறோம். இங்கு பயம் வேறு, பக்தி வேறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு அழைப்பு விடுக்கும் போதே இன்னார் வந்தால் நாங்கள் வரமாட்டோம் என சிலர் கூறக் கேட்டிருப்போம். இது இரு பக்கத்திற்கான உணர்வுநிலையினை பார்க்க கூடியதாக உள்ளது. இங்கே காழ்ப்புணர்ச்சி தலைகாட்டுகிறது.

அன்பற்ற அணுகுமுறையை யாருமே விரும்புவதில்லை. ஒருவர் எவ்வளவு பண்பட்டு இருப்பினும் கருணையற்ற தன்மை கொண்டிருப்பாராகில் அவருடைய ஏனைய நற்குணங்கள் வெளித்தெரியாமல் அடிபட்டு போய்விடும். அழகான மலர்களாக இருப்பினும் அவற்றில் துர் நாற்றம் வீசும் எனில் அதனை எவரும் பயன்படுத்த மாட்டார்கள். அதேநேரம் கண்ணை கவரும் வகையில் இல்லாவிடினும் நல்ல நறுமணமுள்ள மலரை அதிகம் விரும்புவார்கள். இந்நிலையே மனிதர்களிடையேயும் காணப்படுகின்றது.

நாம் வெளிவிடும் வார்த்தைகள், அவை பிரயோகிக்கும் தன்மைக்கேற்ப உணர்வு பிரதிபலிப்பை ஏற்படுத்துவதோடு அதன் அதிர்வலையும் விரிந்து செல்கிறது. அது சூழலில் இருந்து மறுதாக்கம் புரிகிறது. இதனை இரு தாவரங்களை வைத்து ஆய்வு மேற்கொண்டு கண்டுபிடித்துள்ளார்கள். ஒரே வகையான இரு தாவரங்களை ஒரே வகையான சூழலில் வைத்து ஒன்றை மிக அன்பாக பராமரித்து மற்றையதை அன்பற்ற வெறுப்புணர்வோடு பராமரித்தனர். இரண்டுக்கும் ஒரே மாதிரியான ஊட்டச்சத்து வழங்கப்பட்டது. சில நாட்களின் பின் இரண்டு தாவரங்களுக்குமிடையே பெரிய மாறுபாடு உள்ளதை அறிந்து கொண்டார்கள். அன்பான பராமரிப்புடனான தாவரம் அதிக வளர்ச்சியையும், செழுமையையும் கொண்டிருக்க மற்றைய தாவரம் சோபையிழந்து காணப்பட்டது. இந்த ஆய்வு பல தடவைகள் மேற்கொள்ளப்பட்டு ஒரே பெறுபேறுகளையே காட்டியது. அதேவேளை அன்பு, கோபம் என இரு வேறு வகை எண்ணங்களுடன் தாவரங்களை அணுகும் போது அவை வெளிவிடும் அதிர்வலைகளும் [frequency] வேறுபாட்டுடன் இருப்பதோடு கோபத்தோடு, அழிக்கும் எண்ணத்தோடு அணுகையில் தாவரம் பரபரப்போடு சீரற்ற அதிர்வலையை வெளிப்படுத்துவதை கண்டுபிடித்து வெளியிட்டுள்ளனர்.

இரக்கமற்ற இறுக்கமான மனநிலையில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பலர். இந்நிலை வெளியில் உள்ள சூழ்நிலையில் முரண்படுவது மட்டுமல்ல அவரவர் உடல் மற்றும் மனநிலையிலும் முரண்பட்டு பாதிக்கப்படுவார்கள். தாம் பிறரால் புரிந்து கொள்ளப்படாமல் போகின்றோம் என்றே தமக்குள் வருந்துவார்கள். பெரும்பாலும் தம்மில் உள்ள நேர்மறையான விடயமே தத்தம் பார்வைக்கு அதிகம் புலனாகிறது. எனவே பொதுவாக அதிகாரமாக நடந்துகொள்பவர்கள் கூட தமக்குள் தம்மைப்பற்றி தாம் சரியாக நடந்துகொள்வதாகவே எண்ணத்தைக் கொண்டிருப்பார்கள். ஆனால் எத்தகைய நற்குணங்கள் இருப்பினும் பிறர் பார்வைக்கு முதலில் புலப்படுவது முரண்பாடான குணங்களே.

முரட்டு சுபாவம் குழந்தைகள் முதல் பெரியவர்களை மட்டுமல்ல எந்த பிராணிகளையும் கவர்வதில்லை. அவற்றை தவிர்த்து விலகவே விரும்புவர். இத்தகையவர்கள் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு தனித்தே போய்விடுவார்கள். அன்பான தலைமைக்கு விசுவாசிகள அதிகம், அடக்குமுறையாளனுக்கு துரோகிகள் அதிகம் என்பார்கள். இது ஒரு கூட்டத்திற்குள் மட்டுமல்ல பேரண்டத்திலும் பிரதிபலிக்கும்.

ஒருவரது நற்குணங்களுக்கு மத்தியில் கருணையற்ற தன்மை இருக்குமாயின் அவருடைய பிறந்த குடிப்பெருமையை உலகம் சந்தேகிக்கும் என்பது வள்ளுவன் வாக்கு.

கரிணி








## தாய்மை

அன்பு, காதல், தாய்மை, பெண்மை, வீரம், ஞானம், நாதம், அறம், பழமை, புதுமை, அடிமை, கடமை, கல்வி, வேள்வி, புகழ், வெற்றி,பணம், மனம், தவம், , வரம், சக்தி, முக்தி, சித்தி, பக்தி, கனவு, நிலவு , துணிவு, தெளிவு ,மோனம், மோகம், யோகம், தானம்,உண்மை, திண்மை, ஒருமை, ஜெயம், மங்கை,கற்பு அருள், இனிது என்று பாரதியின் மூன்றெழுத்துகளுக்குள் தந்தியடித்துக்கொண்டு இருந்தது என் கண்கள்.

தமிழும் மூன்றெழுதே, தமிழாகி நின்ற பாரதியும் மூன்றெழுத்தே.

எத்தனை முறை இப்பட்டியலைப் பார்த்தாலும் ஒரு சொல்லில் சிக்கி நிக்கிறது சிந்தை அதை வென்று நிக்கிறது அறிவெனும் விந்தை. ஆம் அந்த சொல் ‘தாய்மை’ என்ற உன்னதச் சொல் என்பதை விட வேறென்னவாக இருக்க முடியும் ?

## பெற்றால் தான் தாய்மை வருமா ?

ஒரு குழந்தைக்கு இரு தாய் என்று காட்டி அன்றே ஞானத் தேடலுக்கு வழி சமைத்த கண்ணனையும், பிள்ளையைப் பெற்ற அன்றே பிரிந்து விட்டு , மீண்டும் ஓர் தெய்வ சங்கல்பமாய் சந்திக்கும் போதும் தாய்மை மாறாதிருந்த குந்தியையும், முருகனை வளர்த்த கார்த்திகை பெண்டிரையும் பற்றிய கதைகளை நம் சிறு வயது முதல் சொல்லக் கேட்டு வளர்ந்தோம்.

தாயின் நுனிவிரல் பற்றிச் செல்லும் சேயின் மகிழ்வைக் கண்டு நெகிழ்வோரிலும்,. ஓடி வந்து தழுவும் குழந்தைக்கு அடிமையாகும் நெஞ்சங்களிலும், மழலை மொழி கேட்டு மனம் இளகும் முதியோரிலும்,செல்லப் பிராணியிடத்தே பிரியம் வைக்கும் சிறுவரிடத்தும், கேட்டதெல்லாம் கொடுக்க வேண்டும் என்று முயலும் தந்தையிலும், கேட்காததும் எட்ட வேண்டும் என்று கருணை கொண்ட குருவிலும், இன்னும் செல்லப் போனால் நீர் விட்டாலும் இளநீர் தரும் தென்னையிலும், நிழல் தந்து அமைதி தரும் ஆலையிலும், இன்னறுங்கனி தரும் மரங்களிலும், ஆசை கொண்டு தொட்டு விட்டுச் செல்லும் அலைகளிலும், இத்தனைக்கும் மேலாய் மகா சக்தி கொண்டு எம்மை ரட்சிக்கும் இறைவனிடமும் தாய்மையின் தன்மை புன்னகைக்கிறது. ஆக, இவ்வுலகத்து உயிர்கள் அனைத்தினதும் அன்பின் மடியில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறது தாய்மை.


குழந்தை கேட்காமலே தன் உயிர் முலையினை அதன் வாயினில் நுழைத்து உணர்வூறி பால் தரும் தாயின் மகா கருணையை எண்ணியவாறு கண்ணன் தாயாகித் தரும் ஞானப்பாலை உண்ண உண்ணத் திகட்டாது உணரும் பாரதி, கண்ணன் தன் தாயானால் என்ற பாவனையில் இப்படிச் சொல்கிறார்,

*உண்ண உண்ணத்*
*தெவிட்டாதே- அம்மை*
*உயிரெனும் முலையினில்*
*உணர்வெனும்பால்,*
*வண்ணமுற வைத்து*
*எனக்கே - என்றன்*
*வாயினில் கொண்டு*
*ஊட்டுமோர்*
*வண்ணமுடையாள்.*

தாயின் செயல்கள் சிலர்க்கு வேடிக்கையாகவும் கேலியாகவும் கூட இருக்கலாம் . ஆனாலும் ஒவ்வொரு சிறு சிறு செயலும் சேயின் நன்மை கருதி மட்டுமே இருக்கும். இப்பாடலின் மூலம் காலாகாலமாக,குழந்தைக்கு தாய் ஆற்றிடும் மூன்று முக்கிய செயல்களைச் சாரமாக்கிட முயலலாம்.

**1.குழந்தையோடு கதை பேசி நேரத்தை அர்பணித்தல்.**
**2.சூழ்ந்துள்ள பல விடயங்களை அறிமுகம் செய்து வைத்தல்.**
**3.இன்பம் தரும் விடயங்களை அளித்தல்.**

குழந்தையை மடிமீது இருத்தி, அன்பு சொட்டச் சொட்டப் பல கதைகளை தாயானவள் சொல்லக் கேட்டு இருக்கிறோம். வெற்றி, தோல்வி, இன்பம்,துன்பம்,வீரம்,விவேகம் என வாழ்வியல் நெறி பலவும் , அறம் சார்ந்த உன்னத விடயங்களையும், வள்ளுவனும் ஔவையும் சொன்ன உயரிய கோட்பாடுகளையும் தன் சின்ன கதையில் சுருக்கி சொல்லி மனதில் ஆழப்பதிய வைக்கும் புலமையை தாய்மை மிக எளிதாகப் பெறுகிறது.



குழந்தைக்கு எதில் அதிகம் ஆர்வம் உள்ளது என்பதைக் குறிப்பறிந்து , வயதின் தேவைக்கு ஏற்ப அன்போடு பரவசம் தரும் வகையில் கதைகள் சொல்லியே ஒரு சரித்திரத்தை வரைந்து கொண்டிருக்கும் தாயின் திறமையை எண்ணி பார்த்தல் இதுவும் விந்தை தான்.

சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், மலை, நதி,அவை விழும் கடல்,சோலை,வண்ணப் பூக்கள்,மரங்கள்,அதன் கனிகள் யாவற்றையும் அழகும் இனிமையும் பொருந்த பொம்மைகள் என்று கூறியாயினும் அறிமுகம் செய்வாள். அதன் மூலம் படைப்பின் பெருமையையும் , இயற்கையின் சிறப்பையும் மெல்ல மெல்ல நம் நெஞ்சூறச் செய்வாள்.

மூன்றாவதாக நமக்கு விரும்பியவற்றையெல்லாம் தருவாள் என்று குறிப்பிட்டோம். பாரதியின் கண்ணன் தாயாக என்னவெல்லாம் கொடுக்கிறார் பாருங்கள். நற்சுவை உணவு, தித்திப்பான இசை, ஒற்றுமையாக கூடிப் பழகிட அறிவுடைய உண்மையான நண்பர்கள், கொண்றுடுமென இனி தாய் மிகச் சிறந்த காதலைத் தரவல்ல பெண்கள் , சிறகுடைய பறவைகள், விலங்குகள், ஊர்வன, கடல் வாழ்வன என பல நண்பர்கள், சாத்திரங்கள், இவற்றை விட உயர்ந்த ஞானம் என்று பாரதி பட்டியல் நீள்கிறது.

*‘‘வேண்டிய கொடுத்திடு*
*வாள்,-அவை*
*விரும்பும்முன் கொடுத்திட*
*விரைந்திடுவாள்*
*நீண்டதோர் புகழ்*
*வாழ்வும்-பிற*
*நிகரறு பெருமையும் அவள்*
*கொடுப்பாள்’’*

தாய்க்கு மேல் வேறு ஒரு தெய்வம் உண்டோ ? என்னும் அளவு நமக்கு வேண்டிய அனைத்தையும் எக்காலத்திலும் தரவல்ல அதி சக்தி கொண்ட தாய்மை மட்டும் அன்று தொட்டு இன்று வரை மாறாது இருப்பது நம் பழம்பெரும் பண்பாட்டின் பெருமையும் கூட. அதனைக் கூடத் தக்க வைக்க விரும்பாது, தாயவள் தனக்கான சுகத்தை முதன்மை படுத்தி நாடுவதும், குழந்தைகள் அவரவர் அறிவுக்கு எட்டிய வகையில் பயணிப்பதும் கூட நவநாகரீகம் என்ற போதைக்குள் வாழ்வோரிடத்து வழக்கமாகி வருகிறது. இவர்களின் அறியாமை நிலை கண்டு நகைப்பதை விட வேறென்ன செய்யமுடியும்? நாகரீகத் தாய் என்று தன்னை அடையாளம் காட்டும் தாய் மறந்தாளோ தன் தாயின் தியாகத்தை ? நூற்றாண்டுகளுக்கு முன் எழுதிய பாரதி கவிதைகள் இன்றும் பொருந்தும் வகையில் இருப்பது நினைத்து மீண்டும் அவன் பாதம் சரணடைகிறேன்.




Sari 1
Sari 1
தரமான ஆடைகள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
எம்மிடம் தங்க நகைகளும் பெற்றுக்கொள்ளலாம்
Taunusstr.49, 60329 Frankfurt am Main
0152 1923 9663
Opening Hours: Mon- Sat 10.00 am- 20.00 pm
https://www.facebook.com/sari1fashionhouse


Frankfurt நகரில்...
New
ASIA LAND
Frankfurt (Main)
Hauptbahnhof
முன்பாக 50 மீற்றர்
தொலைவில்
அமைந்துள்ளது
மளிகைப்பொருட்கள் மற்றும் மரக்கறி, கடலுணவுப்பொருட்கள் அனைத்தும் என்றும் சிறந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TAUNUSSTRASSE 49
60329 FRANKFURT
Tel: 069 23 35 35 | Fax: 069 24009760

# இலங்கை தேயிலை தோட்ட தொழிலாளர் அருங்காட்சியகம்





முனைவர்
க.சுபாஷிணி





தென்னிந்தியாவில் இருந்து காப்பி, கொக்கோ மற்றும் தேயிலை தோட்டங்களில் பணி புரிவதற்காக வந்த தென்னிந்திய, அதிலும் குறிப்பாகத் தமிழக மக்களின் வாழ்வின் வரலாற்றுச் செய்திகளை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தியிருக்கும் அருங்காட்சியகம் இது. இந்த அருங்காட்சியகம் இருப்பது ராமன்துறை தோட்டமாகும். இது நுவரலியாவிலிருந்து நியூ பீக்கோக் எஸ்டேட் செல்லும் பகுதியில் சோகம் தோட்டத்திற்கு அருகாமையில் உள்ளது. இந்த அருங்காட்சியகம் மத்திய மாகாண கண்டி பகுதியில் அமைந்துள்ளது.

அருங்காட்சியகத்தின் உள்ளே நுழையும் பொழுது முதலில் நமக்கு தென்படுவது ஒரு சிறிய குடில். இந்தக் குடில் இன்றைக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் இருந்து இலங்கையின் மலையக பகுதிக்குத் தோட்டத் தொழிலாளர்களாக வந்த தமிழ் மக்களின் வாழ்விட கட்டுமாணங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கின்றது.

ஒரு குடில் அதில் ஒரு அறை மட்டுமே. அறை என்ற பிரிவு இல்லாமல் முழு பகுதியும் வெவ்வேறு மூலைகளில் அதன் பொருட்கள் வைக்கப்பட்டு காட்சி அளிக்கின்றன. சிறிய சமையல் பகுதியில் விறகை வைத்துக் கொள்ளும் பகுதி, பானைகளை அடுக்கி வைக்கும் பகுதி, சமையல் பாத்திரங்களை, அம்மி குழவி போன்றவற்றை வைக்கும் பகுதி, என சிறு பகுதியும், படுத்து உறங்கும் பகுதியாக ஒரு பகுதியும் காட்சியளிக்கின்றன. மற்றொரு பகுதியில் துணிகளை உலர்த்தும் மூலை தென்படுகின்றது. சுவற்றில் இந்திய சுதந்திரப் போராட்டத்தலைவர்கள் புகைப்படங்கள் உள்ளன. பண்டித ஜவகர்லால் நேரு, மகாத்மா காந்தி, சுபாஷ் சந்திர போஸ் போன்றோரின் புகைப்படங்கள் சுவற்றில் தென்படுகின்றன.

இவை இம்மக்கள் இந்தியாவின் சமகால நிலையை இலங்கையிலும் பிரதிபலித்தமையை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இந்த குடிசை வீட்டின் உள்ளே அருங்காட்சியக நிர்வாகம் காட்சிப்படுத்தியிருக்கும் பொருள்கள் 1820-களில் தமிழ் மக்கள் பயன்படுத்திய சமையலறைப் பொருட்கள் ஆகும்.

காப்பித் தோட்டத்தில் பணிபுரிய 1820 அளவில் தொடங்கி தமிழகத்திலிருந்து இலங்கையின் மலையக பகுதிக்கு வந்தவர்கள் தற்காலிகமாக தங்கி கொள்வதற்காக கூரைவேய்ந்த இத்தகைய குடிசைகளை அமைத்து அவற்றில் தங்கியிருந்தனர். ஆறு மாதங்கள் காபித் தோட்டங்களில் அவர்கள் பணிபுரிவார்கள். பின்னர் காபி செடிகள் வளரும் பருவத்தில் அவர்கள் தங்களுக்குக் கிடைத்த கூலியைப் பெற்றுக்கொண்டு இந்தியாவிற்கு அதாவது தமிழகத்திற்கு திரும்பிவிடுவார்கள். இக்காலகட்டத்தில் தமிழகத்திலிருந்து மலையகப்பகுதிக்கு வந்தவர்களில் ஆண்களே அதிகமாக இருந்தனர். தோட்டத்தில் 1880 அளவில் காப்பி பயிர்களுக்கு ஏற்பட்ட நோயின் காரணமாக காப்பி விளைச்சல் நிறுத்தப்படவே தேயிலைத் தோட்டங்கள் உருவாகத் தொடங்கின. தேயிலைத் தோட்டப்பணி வருடம் முழுவதும் வேலை பார்க்கக் கூடிய ஒரு தொழில் ஆகையால் 1860 தொடங்கி அடுத்தடுத்த காலகட்டங்களில் இருந்து தமிழகத்திலிருந்து இலங்கையின் மலையக பகுதிக்கு ஆண்களும் பெண்களுமாக குடும்பம் குடும்பமாக பயணித்து வந்து தோட்டங்களில் தொழிலாளர்களாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

மலையகப் பகுதியில் காபி தோட்டங்களில் கொக்கோ மற்றும் தேயிலை தோட்டங்களில் பணிபுரிய வந்த மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார்கள். முறையான சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை இரண்டு ரூபாய் சம்பளம் கிடைக்கும் என்று சொல்லி ஏமாற்றி அழைத்து வந்து ஆனால் ஒரு ரூபாய் சம்பளம் கிடைப்பது கூட சிரமமாக அமைந்த நிகழ்வுகளும் உண்டு. தினக்கூலி என்பது இல்லாமல் வருடத்திற்கு மூன்று முறை மாத்திரம் சம்பளம் என்ற வகையிலும் சிலவேளைகளில் சம்பளம் கிடைக்காத சூழலும் கூட ஏற்பட்டு மலையக மக்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளானார்கள். ஆரம்ப காலகட்டங்களில்

22 ஆம் பக்கம் பார்க்க...








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


சேவியர்

# நடுப்பக்கம்




# மன அழுத்தம் தொலைந்து போக வாசிப்பே மருந்தாகும்!

## அருகிப் போகும் வாசிப்புப் பழக்கம்

முன்பெல்லாம் புத்தகம் வாங்குவது தீபாவளிக்குப் புத்தாடை எடுப்பதை விட அதிக சிலிர்ப்பூட்டக் கூடிய விஷயம். ஒரு புத்தகத்துக்காகக் காசு சேமிப்பது மாதாந்திர இலட்சியம்.

நினைவுகளைக் கொஞ்சம் சுழற்றிப் பார்க்கிறேன். எங்கள் கிராமத்திலிருந்து பக்கத்தில் உள்ள மார்த்தாண்டம் எனும் நகரத்துக்குச் சென்று தான் புத்தகம் வாங்க வேண்டும். சுமார் ஏழு கிலோமீட்டர் பஸ் பயணம். புத்தகத்துக்காகக் சேமித்து வைத்திருக்கும் காசை எடுத்துக் கொண்டு, நகரத்துப் போய் புத்தகம் வாங்கி, உடனே பிரித்து அதன் வாசனை நுகர்ந்து, பேருந்து நிலையத்தில் வசதியாய்ச் சாய்ந்து நின்று வாசிக்க ஆரம்பிப்பேன். பல வேளைகளில் ஊர் வந்து சேரும் முன்பாகவே புத்தகம் வாசிக்கப்பட்டு விடும். புத்தகம் வாங்கக் காசு குறைந்துவிட்டால் பஸ் பயணம் என்பது நடைபயணமாகிவிடும்.

ஒரு புத்தக வாசிப்பு தருகின்ற இன்பம் அளவிட முடியாதது. நூலின், அச்சடிக்கப்பட்ட முதல் எழுத்து முதல், கடைசி பக்கத்தின் கடைசி எழுத்துவரை வாசிக்கும்போது, பசுமையான மலைச்சரிவில் புல் மேய்ந்து திரியும் ஆட்டுக் கூட்டத்தைப் போல மனம் உற்சாகமிடும். வேர்க்கடலை பொதிந்து தரும் காகிதம் முதல், கதவடைக்கும் வரை வாசிக்கும் கல்லூரியின் லைப்ரரி வரை மனதுக்குள் ஏதோ ஒரு காட்சியை வரைந்து கொண்டே இருக்கும்.




வாசிப்புகளின் மீது வசீகரப் பிரியம் வைத்த கடந்த தலைமுறை பாக்கியம் செய்தது. செழுமையான இலக்கியங்களிலும், தகவல் களஞ்சியங்களிலும் மனம் தனது ரசனைகளை விதைத்துக் கொண்டே இருந்தது. சவ்வூடு பரவல் போல கையோடு நூல்கள் இல்லாத கல்லூரி காலங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆறாவது விரலைப் போல கரங்களில் நூல்கள் தொங்காத பயணங்கள் குதிரைக் கொம்பு போல காணக் கிடைக்காதவை.

ஒவ்வொரு புத்தகத்தையும் திறந்தவுடன் ஒரு மிகப்பெரிய மாளிகையின் கிரில் கதவு கிரீச் என திறந்து கொள்கிறது. அதன் பக்கங்கள் பறக்கப் பறக்க மாளிகை நோக்கி கால்கள் ஓடுகின்ற. மாளிகையின் அறைகளெங்கும் மர்மங்களும், சுவாரஸ்யங்களும், வலிகளும் மௌனத்தின் சத்தத்தில் முனகிக் கொண்டிருக்கின்றன. எந்த மனநிலையில் வாசிக்கிறோமோ அந்த மனநிலைக்கு ஏற்ப மாளிகையிலிருந்து பூதங்களோ, தேவதைகளோ புறப்பட்டு வருகின்றனர். எல்லா அறைகளின் மர்ம முடிச்சுகளையும் அவிழ்த்து முடித்தக் களைப்பில் பின் வாசல் வழியாக வெளியேறும் போது நினைவுகளின் பள்ளத் தாக்குகளில் ஆயிரக்கணக்கான மாளிகைகள் முளைத்துக் கிளம்புகின்றன.

ஒரு நூல் என்பது ஒரு நூல் அல்ல ! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நூல் ! ஒவ்வொருவரும் தங்களது வாழ்வியல் அனுபவத்தில் அந்த நூலைப் பொருத்திப் பார்க்கின்றனர். அதனால் தான் சிலரை வசீகரிக்கும் நூல், சிலரால் நிராகரிக்கப் படும். சிலரை ஊக்கப்படுத்தும் நூல், சிலரைச் சலனப்படுத்துவதில்லை. நூல் என்பது வெறும் எழுத்துகள் சொல்லும் செய்தியல்ல. எழுதப்பட்ட எழுத்துக்கள் நமது வாழ்வின் வலிகளோடு கடந்து செல்லும் போது உருவாகின்ற தடங்கள். அந்தத் தடங்களின் அழுத்தமே நூலின் மீதான தாக்கத்தை உறுதி செய்கிறது.

இப்படி வாழ்வில் மிகப்பெரிய

17 ஆம் பக்கம் பார்க்க...


Dortmund நகரில்...
S.K.SILKS GOLD PARAADISE
அனைத்து ஆடைகளும் புதுரகம்
அதிகமான தெரிவுகள்.
இமிரேஷன் நகைகள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Mobil: 01705429251
Mr.P.Sritharan.
Proprietor
SK SINCE-2003
Adler Str 33 - 44137 Dortmund | Tel: 0231 9501 647
விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

ஒரு தோழனாக, வசீகரமாக இருந்த வாசிப்புப் பழக்கம் இன்றைக்கு கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக மாறிவிட்டது. வாழ்க்கை நம்மை அவசரத்தின் பிள்ளைகளாக உருமாற்றியதால், நிதானத்தின் வாரிசான வாசிப்புப் பழக்கமானது புறக்கணிப்பின் பின் வாசல் வழியே வெளியேறிவிட்டது.

அவசர யுகம் எல்லாவற்றையும் உடனடியாக முடிக்க வேண்டும் என கட்டாயப்படுத்துகிறது. முன்பெல்லாம் நானூறு பக்கம், ஐநூறு பக்கம் என நீண்டு விரிந்த வரலாற்று நாவல்கள் அறைகளை ஆக்கிரமித்திருந்தன. வேப்பமர நிழல்களும், புளியமர வேர்களும் கிராமத்து வாசகசாலைகளாய் இருந்தன. நாவல்கள் வாசிக்கும் பொறுமை இன்றைக்கு இல்லை. அரைபக்கக் கதைகளைப் படித்து முடிப்பதே பெரிய விஷயம் போலப் பாவிக்கும் தலைமுறை வந்து விட்டது. இன்றைய வாசகர்கள் நாவலை வாசித்து காட்சிகளை தங்கள் மனவெளிகளில் உருவாக்க விரும்புவதில்லை. நேரடியாக காட்சிகளை தங்கள் மூளையில் இறக்குமதி செய்யவே விரும்புகிறார்கள். அங்கே கற்பனை கதவடைப்பு செய்கிறது. புகைப்படங்கள் தஞ்சமடைகின்றன.

**இரவின் கும்மிருட்டுகளை இப்போது ஸ்மார்ட்போனின் வெளிச்சத் திரைகள் தான் கிழித்துக் கொண்டிருக்கின்றன**

விவல் உலகம் வாசிப்பு உலகத்தை ஒரே வெட்டில் வீழ்த்தி முன்னேறி விட்டது. எழுத்து உலகம் என்பது மீம்ஸ்களின் மடியில் தலைசாய்த்து உறங்குகிறது. அவசர மீம்ஸ்களுக்குச் சிரித்து, நான்குவரி தத்துவத்தில் சிலாகித்து, டிக் டாக் வீடியோக்களில் மனம் மகிழ்ந்து மக்களின் நேரம் முடிந்து விடுகிறது. விடிய விடிய உட்கார்ந்து நாவல் வாசித்த காலங்கள் மலையேறிவிட்டன. இரவின் கும்மிருட்டுகளை இப்போது ஸ்மார்ட்போனின் வெளிச்சத் திரைகள் தான் கிழித்துக் கொண்டிருக்கின்றன.

வாசிப்பு குறைந்து போவதற்கு வாசகனின் ரசனை இடம் மாறியதைப் போல, எழுத்தாளனின் தரம் தடம் மாறியதும் ஒரு காரணம் எனலாம். தமிழின் சுவையைப் பந்திவைக்கும் எந்த நூல்களும் இப்போது வருவதில்லை. அத்தி பூத்தாற் போல வருகின்ற சில நூல்கள் தவிர்த்து! அறிவுரைச் சாட்டையைச் சுழற்றும் நூல்களை மக்கள் விரும்புவதில்லை. தன்னம்பிக்கை என்று சொல்லி பக்கம் பக்கமாகப் பாடம் எடுக்கும் கட்டுரைகள் கயலான் கடைக்கு அனுப்பப்படுகின்றன. ரசனையை இடம் மாற்றிய வாசகனின் எல்லைக்குள் எழுத்தாளன் நுழைய வேண்டிய காலம் வந்து விட்டது.



மீன்கள் நதிமாறி விட்டால், தூண்டில்காரன் மட்டும் பழைய இடத்தில் இருப்பதில் எந்த பயனும் இல்லை. அவனும் தனது தூண்டிலை புது தளங்களுக்குள் நகர்த்த வேண்டும். அவனும் தனது வலைகளை புதிய குளங்களில் விரிக்க வேண்டும்.



அவனும் தனது உத்திகளையோ, பத்திகளையோ கவனிக்க வேண்டும். காலம் காலமாக ரசனைகள் மாறுகின்றன. வாசகன் மாறுகிறான். அதை எழுத்தாளர்களும் உணர வேண்டும்.

பண்டில் பண்டிலாக வாங்கிப் படித்த நிலையை விட்டு, கிண்டில் காலத்தில் நுழையும் வாசகனுக்கு ஏற்ப எழுத்தாளனும் மாற வேண்டும். டிஜிடல் திரைகளுக்கு ஏற்ப தமிழின் நூல் கட்டமைப்புகள் மாற வேண்டும். ஓலைச்சுவடி காலத்தில் நெருக்கியடித்த செய்யுள்கள் பல்லாயிரம் ஆண்டு கடந்தும் வாசனை வீசுகின்றன. காகிதக் காலத்தில் விசாலமான பரப்புக்கு இடம்பெயர்ந்த இலக்கியம் நூற்றாண்டுகள் கடந்தும் வசீகரிக்கின்றன. டிஜிடல் வெளியில் நுழைகின்ற தமிழும் காலங்களைத் தாண்டி கவனிக்கப்பட வேண்டும் !

எழுத்தாளர்கள் வாசகனின் ஆதர்ஷ பிம்பங்கள். ஔவை என்றதும் எழுகின்ற அன்பொழுகும் மரியாதைக்குக் காரணம் அவரது எழுத்துகள் மட்டுமல்ல, அவரது இயல்புகளும் தான். கம்பன் என்றதும் எழுதின்ற பிரமிப்புக்கு அவரது எழுத்துகள் மட்டுமா காரணம். வள்ளுவர் என்றதும் எழுகின்ற பெருமைக்கு அவரது எழுத்து மட்டுமா காரணம் ? இல்லை. அவர்களது வாழ்க்கையும், இயல்புகளும் மிக முக்கிய காரணம். ஒரு எழுத்தாளன் தனது படைப்புகளில் போலித்தனம் காட்டும்போது அந்த படைப்பு வலுவிழந்து விடுகின்றது. சாதீய வெறியில் ஊறிப் போன ஒருவன், சாதி மறுப்பு சார்ந்த படைப்பை உருவாக்கும் போது அது கேலிக்கூத்தாகிவிடுகிறது. படைப்பு என்பது படைப்பாளி முகம் பார்க்கும் கண்ணாடியாய் இருக்க வேண்டும். அல்லது படைப்பாளியின் கண்மூலமாக உலகைப் பார்க்கும் முயற்சியாக இருக்க வேண்டும். தண்ணி அடித்துக் கொண்டே, மதுவைத் தீண்டாதே என்பது இலக்கியவாதியையும், இலக்கியத்தையும் ஒரு சேர புறக்கணிக்க வைக்கும்.

வாசிப்பு, குழந்தைகளின் கவனத்தையும் கல்வியையும் சீராக்கும் என பல்வேறு ஆராய்ச்சிகள் சொல்கின்றன. அவர்களுடைய வாழ்க்கை செழுமையாக இருக்க வேண்டுமெனில், அவர்களுடைய சிந்தனை கூர்மையாக இருக்க வேண்டுமெனில் வாசிப்பு தேவை என்பதை ஆய்வாளர்கள் சொல்கின்றனர். அவர்களை காட்சி ஊடகங்களிடம் விற்று விடாமல், வாசிப்பு வனத்துக்குள் உலவ விட வேண்டியது நமது கடமையாகும் !

வாசிப்பை நேசிக்கும் எவருக்கும் மன அழுத்தம் எளிதில் வருவதில்லை. வருகின்ற மன அழுத்தத்தை ஒரு நூலை வாசிப்பதன் மூலம் எளிதில் தூக்கி எறிய முடியும். வாசிப்பை நேசிப்பவர்கள் எப்போதுமே தனிமையாய் உணர்வதேயில்லை. அவர்களோடு பயணிக்க கதாபாத்திரங்கள் ஆயிரமாயிரம் உண்டு. வந்தியத்தேவனின் வார்த்தைகளோ, கோபல்ல புரத்து வீடுகளோ அவனோடு எப்போதும் கதை பேசிக்கொண்டே இருக்கும். எந்தத் தலைமுறையும் உதறிவிடக் கூடாத உன்னதமான ஒரு விஷயம் வாசிப்பு.

வாசிக்கும் தளம் மாறுபடலாம். ஐபேட்களோ, கிண்டில்களோ, ஐபுக்களோ புத்தகத்தின் வடிவத்தை மாற்றலாம். ஆனால் வாசிக்கும் பழக்கத்தை நாம் அழித்துவிடக் கூடாது. வாசிப்பு அழியும்போது மனிதனின் சிந்தனையும், கற்பனையும் உடைபடுகின்றன. அவன் இலக்கிய வாசனையிலிருந்து, இயந்திர வாசனைக்குள் விழுந்து விடுகிறான்.

**வாசிப்பை நேசிப்போம்,**
**அருகி வரும் வாசிப்பை**
**அருகில் வரவைப்போம்!**









# இலக்கியத்தில் இவர்கள்...

கௌசி

### அகமும் அஃறிணையும்

காதலை உரியவர்களிடம் எப்படி எடுத்துரைக்கலாம்? யாரைத் தூதாக அனுப்பலாம்? அல்லது எம்முடைய உள்ளத்து உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தலாம்? போனால் போகிறது கண்ணாடிக்கு முன்னே நின்று தம் காதலரின் பெயரைச் சொல்லிப் பார்ப்பார்கள். நினைப்பவற்றை எல்லாம் கூறித் தீர்ப்பார்கள். ஏனென்றால், கண்ணாடி மறுவார்த்தை பேசாது. கடிதங்கள் தூது போகும். ஏனென்றால், கடிதத்திற்கு அறிவுரை கூறத் தெரியாது. கவிதைகளை கடதாசித் துண்டுகளில் எழுதி எழுதிக் கிழிப்பார்கள். கிழிக்கக் கிழிக்க கடதாசி அழுவது கிடையாது. இவ்வாறுதான் இலக்கியத்தில் காதலர்கள் மாத்திரமல்ல பலரும் தமது உணர்வுகளை தூதாக அனுப்பினார்கள். அல்லது தம்முடைய உணர்வுகளை அஃறிணைப் பொருட்களிடம் எடுத்துரைக்கின்றார்கள். ஏனென்றால், அப்பபொருட்களிடம் உரையாடும் போது அச்சமில்லை, வெட்கமில்லை, துரோகம் இல்லை.

எனவே தம்முடைய எண்ணத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தக் கிளியை, மேகத்தை, காக்கையை, அன்னத்தை, புறாவை, குயிலை, காற்றைத் தூதாக அனுப்புவதும் பேசுவதும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. சத்திமுத்துப் புலவர் தன்னுடைய வறுமையை அறிவிக்க நாரையைத் தூதாக அனுப்பினார். நளன் தன்னுடைய காதலை தெரிவிக்க அன்னத்தைத் தூதாக அனுப்புகின்றார், மேகத்தை தூதுவிட்டால் திசை மாறிப் போகும் என்று தண்ணீரைத் தூதுவிட்டு அந்தத் தண்ணீருக்கு முத்தமிட்டு வழி அனுப்பும் காதலியானவள், தான் பூசும் சந்தனத்தை கரைத்துவிட்டுத் தான் வந்திருக்கும செய்தியை அருவியில் நீராடும் காதலனுக்கு எடுத்துரைப்பதாக வைரமுத்து எழுதுகின்றார்.

நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் கண்ணனாகிய தன் காதலனில் கொண்டுள்ள காதலை வெளிப்படுத்த சங்குடன் பேசுகின்றாள்.

*கற்பூரம் நாறுமோ*
*கமலப்பூ நாறுமோ*
*திருப்பவளச் செவ்வாய்*
*தான் தித்திக்குமோ*
*மருப்பொசித்த மாதவன்றன்*
*வாய்ச்சுவையும் நாறுமோ*
*விருப்புற்றுக் கேட்கிறேன்*
*சொல்லாழி வெண்சங்கே*

கடலிலுள்ள சங்கே! கண்ணனுடைய திருப்பவளச் செவ்வாயுடன் தொடர்பு கொண்டுள்ளாய். அக் கண்ணனுடைய திருவாயில் கற்பூர மணக்குமோ? தாமரைப் பூ மணக்குமோ? அந்த வாயானது நல்ல தித்திப்பாக இருக்குமோ? யானையின் கொம்பை உடைத்த கண்ணனின் வாயின் சுவையும் மணக்குமோ வேண்டிக் கேட்கிறேன் சொல் என்று பாடுகின்றாள்.

இவ்வாறு மனதுக்குள் இருக்கும் வார்த்தைகள் வெளிவிடப்படாது போனால், மன அழுத்தத்தைக் கொண்டு வரும். அதற்கு வெளிப்படுத்தும் இடம் பங்கம் விளைவிக்காததாக இருக்க வேண்டும்.

தோழர்களைத் தூது விட்டால், அவர்கள் மனதை மாற்றிவிடுவார்கள் என்ற எண்ணம் வேரூன்றிப் போய் விட்ட சம்பவங்களும் நடந்திருக்கின்றன. தோழி தன் காதலனை தனக்கு உடைமையாக்கிவிட்டாள். தோழி தன்னைப் பற்றி அவதூறாகச் சொல்லி விட்டாள் என்று மனமுடைந்து போன பெண்களும் அதிகம். மாறாக தோழன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று கவலைப்படும் ஆண்களும் அதிகம்.

இதைவிட சில விடயங்களுக்கு உதவிக்கு என்று சிலரைச் சிலரிடம் அனுப்பும் போது நம்பி அனுப்பப்படுபவர், தம்முடைய நல்ல அபிப்பிராயங்களைச் சம்பந்தப்பட்டவரிடம் மாற்றிவிட்டு தன்னைப் பெருமையாகக் காட்டிவிட்டு வருகின்ற பல நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. கவலைகளைப் பகிர்ந்து கொள்ளும் போது ஆறுதலாகக் கேட்டுவிட்டு அடுத்தவர்களிடம் இப்படி நடந்துவிட்டது என்று நக்கல் பேச்சுப் பேசுகின்ற மனிதர்களே அதிகமாகக் காணப்படுகின்றார்கள். அதனால், மனிதர்களுக்கு இருக்கின்ற வக்கிர புத்தி, பொறாமைக் குணங்கள், சம்பவங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்ற தன்மை அஃறிணைப் பொருட்களுக்கு இல்லை என்று அஃறிணைப் பொருட்களுடன் பேசுகின்ற இலக்கியக் கதாபாத்திரங்கள் அமைகின்றன.

தற்காலத்திலே வட்ஸ்அப் விடுதூது இருக்கின்றது. இது காதலுக்கு மட்டுமல்ல. பலரை ஆற்றுப்படுத்துவதற்கும் பயன்படுகின்றது. இதிலே பல சங்கடங்களையும் எதிர்நோக்க காணுகின்றோம். எழுத்திலே அனுப்புகின்ற செய்திகள் பலருக்கும் பரிமாறப்படுகின்றன. பேசி அனுப்பும் செய்திகள் பரிமாற்றப்பட்டு பரிகாசமாக விமர்சிக்கப்படுகின்றன. இதனால், அச்சம் கொண்ட பலரும் வட்;ஸப் விடுதூதிலே நேரடியாகவே பேசிவிடுகின்றார்கள். [ உண்மையாக இருப்பவர்கள் எதிலும் அச்சம் கொள்ளத்தேவை இல்லை] எதிலும் அச்சம், எதிலும் நம்பிக்கை இன்மை போன்ற விடயங்கள் மனிதர்களிடம் காணப்பட மனிதர்களே காரணமாகின்றார்கள். இதனால், அஃறிணைப் பொருட்களுடன் உரையாடி மகிழ்கின்றார்கள். எழுத்தாளர்களும் இவ்வாறே உருவாகின்றார்கள்.

செருப்புவிடு தூது பற்றி அதிகம் அறிந்திருப்பீர்கள். தியேட்டர்களில், பஸ் வண்டியில் முன்னே இருக்கும் பெண்களுக்குப் பின்னே இருக்கும் ஆண்கள் செருப்பால் சுரண்டிச் சுரண்டித் தூதுவிட்ட சம்பவங்கள் பற்றி யாவரும் அறிந்திருப்போம். செருப்புவிடு தூது செருப்படித் தூதாக மாறிய சம்பவங்களும் உண்டு. மனிதர்களைத் தூதாக அனுப்பினால்,என்ன நடக்கும் என்று எம் மக்கள் அறியாதவர்கள் இல்லை.



Distributed by:
BTM International UK Ltd, 80 Goodhall Street, Park Royal,London NW10 6TS, United Kingdom






## Dr.நிரோனின் அதிசய உலகம்

# பிரபலமான ஓவியங்களில் ஒளிந்திருக்கும் மர்மங்கள்?

நாம் இத்தனை நாட்களும் ஒன்று அல்ல இரண்டு அல்ல நூறு தடவைக்கு மேல் பார்த்த பல விதமான பிரபலமான ஓவியங்கள் மற்றும் கலைப் பொருட்களில் நம் கண்ணில் படாத பல ஆச்சரியமூட்டும் விஷயங்கள் மறைந்திருக்கின்றன என்று கூறினால், அதை உங்களால் நம்ப முடியுமா? என்ன நண்பர்களே, நம்ப முடியவில்லையா? அப்படி என்றால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

பிரபலமான கலை வேலைப்பாடு கொண்ட ஓவியங்களில் நம்மால் யூகிக்கக் கூட முடியாத ரகசியங்கள் ஒளிந்துள்ளன என்பதை கூறியிருந்தேன். இந்த வரிசையில் முதலாவது இடத்தைப் பிடித்திருப்பது வேறொன்றும் இல்லை, லியொனார்டோ டா வின்சி [Leonardo da Vinci] வரைந்த மோனாலிசா ஓவியம் தான். இந்த ஓவியத்தில் என்ன சிறப்பு என்று எல்லோருக்குமே தெரிந்திருக்கும், இருந்தாலும் என்னுடைய திருப்திக்காக ஒரு தடவை கூறுகின்றேன். இந்த ஓவியத்தில் இருப்பது யார் என்பது யாருக்குமே தெரியாது, அந்த ஓவியத்தில் இருக்கும் பெண்ணைப் பார்த்தால் சிரிப்பது போன்று தெரியும், ஆனால் சிரிக்காத மாதிரியும் தோன்றும், உண்மையில் அந்தப் பெண் சிரிக்கிறார்களா இல்லையா எனக் கூடத் தெரியாது.


Dr.நிரோஷன் தில்லைநாதன்

சரி அதைவிடுங்கள், இப்போது விஷயத்திற்கு வருவோம். இந்த ஓவியத்தினை வரைந்தவரான லியொனார்டோ டா வின்சி பெயரில் உள்ள எழுத்துக்கள் L மற்றும் V ஓவியத்தின் வலது கண்ணில் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் ஓவியத்தில் உள்ள அந்தப் பெண், அவரது கையை தனது வயிற்றுப் பகுதியுடன் அரவணைத்து இருப்பதால், பெரும்பாலும் அவர் கர்ப்பமாக இருந்த ஒரு பெண்ணாகத் தான் இருக்கும் என்று நம்புகிறார்கள். அதுமட்டுமில்லை இந்த ஓவியத்தில் உள்ள பாலத்தில் 72 என்கிற எண்ணும் வரையப்பட்டுள்ளதைக் காணலாம். இதற்கும் கூட என்ன அர்த்தம் என்பது தெரியவில்லை! இது எல்லாமே போதாது என்று, இன்றைய நவீன தொழினுட்ப முறைகளின் உதவியுடன் இந்த ஓவியத்தை நன்றாகச் சோதித்துப் பார்த்த போது தான் ஒரு வியப்பூட்டும் உண்மை தெரியவந்தது. இன்று நாம் காணக்கூடிய இந்த மோனாலிசா ஓவியம் உண்மையில் ஏற்கனவே டா வின்சி வரைந்த ஒரு பெண்ணின் மெருகேற்றிய ஓவியமென்று.




இப்படியே இரண்டாவது ஓவியத்திற்கு வருவோம். இது தான் பொட்டிச்செல்லியின் (Botticelli) Primavera ஓவியம் ஆகும். 1482ம் ஆண்டு வரையப்பட்ட ஓவியமாக கணிக்கப்பட்டுள்ள இந்த ஓவியம் மேற்கத்திய கலை வேலைப்பாட்டைக் காட்டுகின்றது. பல கற்பனை பாத்திரங்களை இந்த ஓவியம் எளிதாக காட்டினாலும், இந்த ஓவியத்தில் மறைமுகமாக சுமார் 500 வகையான வித்தியாசமான தாவர இனங்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் அநேகமாக அனைத்துத் தாவர இனங்களையும் இந்றைய தாவரவியலாளர்கள் இனம் கண்டுபிடித்துள்ளனர், இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால், இந்தப் படத்தில் சுமார் 190 வகையிலான பூ இனங்கள் மிகவும் நுணுக்கமாக வரையப்பட்டுள்ளன என்பது தான். எனவே இதில் தோன்றும் கேள்வி என்னவென்றால், ஓவியராகிய பொட்டிச்செல்லி இத்தனை வித்தியாசமான பூ வகைகளை ஏன் வேறுபடுத்திக்காட்ட வேண்டும்? அதுவும் குறிப்பாக இந்த படத்தில் ஏன் அப்படிக் காட்ட வேண்டும். இதற்குப்பின்னால் இருக்கும் மர்மம் என்ன?

அப்படியே அடுத்த ஓவியத்திற்கு வருவோம். இப்போது பாபிலோ பிக்காசோவின் (Pablo Picasso) The old Guitarist எனும் ஓவியத்தைப் பார்ப்போம். 1901 முதல் 1904 வரை இருந்த Picasso's Blue Period என்கிற கால கட்டத்தில் ஒரே வண்ணத்தினாலான ஓவியங்களை வரைந்தார். அதில் பிரபலமான ஒன்று தான் “The old Guitarist” ஓவியம் ஆகும். இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், இந்த ஓவியத்தை பிக்காசொ உண்மையில் முதலில் வரைந்த ஒரு பெண் உருவம் கொண்ட காகிதத்தில் தான் வரைந்துள்ளார். அந்த ஓவியத்தில் இருக்கும் நீல வண்ணத்தைக் கொஞ்சம் கூர்ந்து பார்த்தால் அதே ஓவியத்தின் கழுத்துப் பகுதி அருகே மற்றொரு பெண்ணின் உருவம் அமைந்திருப்பதைக் காணலாம். இது ஆச்சரியமாக இல்லையா?



சரி இனி நான்காவது ஓவியத்திற்கு வருவோம். லியொனார்டோ டா வின்சியின் The last supper அதாவது இயேசு கிருஸ்துவின் இறுதி இராவுணவு ஆகும். இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், இந்த ஓவியத்தை இடது – வலது மாற்றம் செய்து இந்த ஓவியத்தின் மீது வைத்துப் பார்த்தால் அதில் இரு தேவாலய புனித வீரர்கள் அருகருகே இருப்பதுபோலவும், இயேசுவின் அருகே ஒரு பெண்மணி கையில் குழந்தையுடன் இயேசுவினை பார்ப்பது போலவும் இருக்கும். அது மட்டுமில்லாமல் ஓவியத்தில் இயேசுவுக்குப் பின்னால் உள்ள ஜன்னலில் கண்டுபிடிக்கப்பட்ட சில விஷயங்களை வைத்து 4006 ஆம் ஆண்டில் பெருவெள்ளத்தினால் நாம் உலக அழிவை எதிர்பார்க்கலாம் என்று கூட கூறப்பட்டுள்ளது.

அட இது எல்லாமே போதாது என்று 2007 ஆம் ஆண்டில் Giovanni Maria Pala என்பவர் இந்த ஓவியத்தில் காணப்படும் ஒவ்வொரு பாண் துண்டுகளிலும், மேலும் ஒவ்வொருவரின் கைகளிலும் கருப்புப் புள்ளிகளை வரைந்தார்.

28 ஆம் பக்கம் பார்க்க...






Jaffna Bazar
Jaffna Bazar
2020 ஆண்டுக்கான
புத்தம் புது டிசைன்களை
வாங்கி மகிழுகள்!
உங்கள் இல்லத்திற்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களும்
பசுமையான மரக்கறி மற்றும்
கடல் உணவு வகைகளும்
KADHIR
Laila
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# The Reality of Hindu Tamils' lifestyle and the less spread of Covid 19 in Northern province of Sri Lanka

Bavvatharani R
Nallur



Now that the coronavirus crisis has clawed its way into almost every continent. The spread of the corona virus called Covid 19 has made an immense hit on the planet earth locking and separating the toddlers and the aged in their own houses and distancing them socially. The parents do not hug their children. People do not shake hands. The functions, parties, weddings and funerals are conducted with a few close members. People are stuck in the places where they stayed to study and work. Curfew and lockdowns make people imprisoned in their own houses. People do not peep through the windows to greet even their neighbours. The transport services are stopped. The newspapers and milk are not delivered. Corona patient is kept in the hospital alone and when the patient dies the body is buried without the beloved ones. The one who dies of Covid 19 are dumped with other bodies and no funeral rites are performed for even the rich. Cops are deployed to ensure people do not step out unnecessarily, every cough or sneeze draws harsh glares, and the prospect of stepping out to get even necessities comes saddled with dire consequences. Fears of running out of food and necessities also weigh on people. The poor and the rich, the learned and the laymen all follow the guidelines of Covid 19 with stress, strain and depression. This is the present scenario of the year 2020.

The Tamils of Sri Lanka possess unique culture and lifestyle. Especially the Hindu Tamils in Sri Lanka conduct festivals for all the deities which take place from January to December every year. The almanac contains all the details of auspicious days, New year, guru poojas, Thai Pongal, Deepavali, Navaratri etc. They fast and eat vegetarian foods during those days and usually they consider Tuesdays and Fridays as holy days in a week and they avoid being a non-vegetarian during those days. Each family cleans the entire home and their yard at least twice in a month due to these special days and sprinkle turmeric water and make a God Ganesh idol with cow dung and also spread the cow dung in their yard or Thinnai. They wear holy ash which is made from the burnt cow dung on their forehead and some wear in their entire body every morning and evening. Science proved that it will help the people from radiation and also maintain the human hydration. The water mixed with Thulasi in copper vessel used as holy water called Theertham at temples which usually prevent us from cold and from other ailments. They keep a bucket of water to wash their feet when they enter their home. They wash cloths and take bath when they go to see sick people and funerals. They do not drink or eat in such places. One can elaborate such healthy routine of Hindu Tamils in Sri Lanka especially in Jaffna Peninsula where one can observe how people strictly follow the ancient way of life.



During this pandemic period people have unfathomable mental health implications whereas the Hindu Tamils have no need to change their lifestyle as they already have a long commendable healthy and spiritual lifestyle. The Hindu Tamils do not generally shake hands and hug others where they meet others, they keep their palms together and with a smile they express their welcome and greetings. In Jaffna the houses are built in a hygienic way. The wells and the toilets are built in a good distance to maintain the purity of the water. The plants such as neem, Thulasi, banana and other herbs are in almost everyone's compound.

Lockdowns and quarantines have become the norm in most affected places, grinding life to a standstill. A deafening silence pervades in-between tourist with its jarring dearth of life. Those with pre-existing depression and anxiety are at a greater risk of it becoming worse during this time. There are also signs of worsening depression such as suicidal thoughts which should be taken seriously. The Hindu Tamils worship god at home where they have a shrine room. The families generally sit together and sing devotional songs chant mantras and even do yagnas in a small scale.as the lifestyle of a Hindu is very calm and as they are god fearing the family members

Continu/ page27







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

I5 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆங்கிலேயர்கள் மலையகத்தில் பணிபுரிய வந்த தமிழ் பெண்களை பாலியல் வன்கொடுமைகள் செய்தமையும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும், அதன் பின்னர் படிப்படியாக ஆங்கிலேயர்கள் குடும்பம் குடும்பமாக வந்து தங்கிய பின்னர் இந்த பிரச்சினைகள் குறைந்தாலும் தமிழ் மலையக கங்காணிகள் தமிழ் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்வது பெருவாரியாகத் ஆகவே தொடர்ந்தது.

இலங்கையின் தோட்டங்களில் பணி புரிவதற்காக கி.பி.1800 களின் ஆரம்பங்களில் இருந்து தமிழக மக்கள் தூத்துக்குடியிலிருந்து கடற்கரை பகுதிக்கு வந்து அங்கிருந்து கொழும்புவிற்கும் தமிழகத்தின் வடக்கு பகுதியின் பல்வேறு நகர்களில் இருந்து ராமேஸ்வரம் வந்து பின்னர் அங்கிருந்து தனுஷ்கோடி வந்து பின்னர் அங்கிருந்து மன்னார் தலைமன்னார் போன்ற பகுதிகளுக்கு வந்து கால்நடையாகவே ஏறக்குறைய 140 மைல் தூரம் நடந்து பயணித்து இலங்கையின் மத்திய பகுதியான மலையகப் பகுதிகளுக்கு வந்து சேர்ந்தனர். பல துன்பங்களைக் கடந்து வந்த மக்கள் கடுமையான உழைப்பைச் செலுத்தி காடுகளை தூய்மைப்படுத்தி காப்பி தோட்டங்களையும் கொக்கோ பயிர்களையும் தேயிலை தோட்டங்களையும் உருவாக்கினார்கள்.

மலையக மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்வதற்குத் தொழிற்சங்கங்கள் தொடங்கப்பட்டன. அவை பத்திரிகைகள் வாயிலாகவும், பிரச்சாரங்கள் வழியாகவும் மக்களுக்குத் தங்கள் உரிமைகளை அவர்கள் பெற உதவும் வகையிலான நடவடிக்கைகளை தொழிற்சங்க தலைவர்கள் அக்காலகட்டத்தில் செயல்படுத்தினர். பிரச்சாரங்கள் பாடல்கள், நாடகங்கள், கூத்துகள் வழியாகவும் எளிய மலையக தமிழ் மக்களுக்குத் தங்கள் உரிமைகளை அவர்கள் உணர்ந்துகொள்ள தொழிற்சங்க தலைவர்களும் செயல்பாட்டாளர்களும் முன்னெடுத்தனர். அத்தகைய தொழிற்சங்க தலைவர்களின் புகைப் படங்களும் இந்த அருங்காட்சியத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



1948ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் கிட்டியது. சுதந்திரத்திற்குப் பிறகு இலங்கையில் சிங்கள மக்களில் குறிப்பிடத்தக்க சில தலைவர்களின் தொடர் முன்னெடுப்புக்களினால் இலங்கைக்குப் பணியாற்ற வந்த தமிழக மக்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்னெடுக்கப் பட்டது. மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் தமிழ் மக்களுக்கு சரியான, முறையான குடியுரிமை மற்றும் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டே வந்தது. 1964ஆம் ஆண்டு சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி ஏறக்குறைய ஐந்தரை லட்சம் தமிழ் மக்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும்,ஏறக்குறைய மூன்றரை இலட்சம் தமிழ் மக்கள் இலங்கை குடியுரிமை பெறுவார்கள் என்றும், ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் நாடற்றவர்கள் என்றும் வகைப் படுத்தப் பட்டார்கள். இலங்கையில் வாழ்ந்த தமிழ் பெருந்தோட்ட தொழிலாளர்கள் 2003 ஆம் ஆண்டு வரை தங்கள் குடியுரிமை பிரச்சினைகளில் பல்வேறு வகையான சிரமங்களை எதிர்கொண்டனர். இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் மக்களும் தமிழகத்திற்குத்திரும்பியபின்தாங்கள்விட்டுச் சென்ற காணிகளை இழந்து, சொத்துக்களை இழந்து, பொருளாதார பிரச்சினைகளைப் பெருவாரியாகச் சந்தித்து தங்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்கவேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.. இவ்வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்தும் பல்வேறு கையெழுத்து ஆவணங்கள் இந்த மலையக தோட்டத் தொழிலாளர் அருங்காட்சியகத்தில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கடந்த 200 ஆண்டுகளாக மிகுந்த பொருள் வளத்தை தரும் ஒரு துறையாக இருப்பது தேயிலைத் தோட்டங்கள். இலங்கைக்கு பெரும் வளத்தை உருவாக்கித் தந்ததோடு, உலக அளவில் எல்லா உயர்தர தங்கும் விடுதிகளிலும் மேற்கத்திய நாடுகளிலும் மிக முக்கிய பானமாக கருதி பயன்பாட்டில் இருக்கின்றது இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலை. இலங்கையின் மலையகம் சுவர்க்க லோகம் என்று இங்கு வருகின்ற ஒவ்வொருவரும் எண்ணும் வகையில் மலையகத்தில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்கள் அழகுறக் காட்சியளிக்கின்றன. இதனை உருவாக்கிய மலையக தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையோ இன்றளவும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கும் வகையிலேயே தொடர்கின்றது.

முறையான சுகாதார நலன் இன்றி இம்மக்களின் அன்றாட வாழ்க்கைத் தொடர்கின்றது. கல்வி மேம்பாடு தொடர்பான விஷயங்களிலும் இம்மக்களுக்கு மேம்பாடு தேவைப்படுகின்றது. குடியிருக்க சொந்த வீடுகள் இன்றியும்,தேயிலைத் தோட்டங்களிலேயே அவர்களது பிறப்பு முதல் இறப்பு வரை நிரந்தரமற்ற ஒரு வாழ்க்கையாகவே முடிந்து விடும் அவலமும் தொடர்கிறது. மலையக மக்கள் அருங்காட்சியகத்தில் பணிபுரிகின்ற அதிகாரி திரு.சந்தனம் சத்தியநாதன் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் தமிழ் மரபு அறக்கட்டளை சார்பில் நன்றியினையும் பாராட்டுக்களையும் பதிகின்றோம்.

---




02 ஆம் பக்கத் தொடர்ச்சி...

நடவடிக்கைகள் குறையலாம். இராணுவத்தின் எண்ணிக்கையும் குறையாலாம். இராணுவக் கெடுபிடிகளினால் காணிகள் சுவீகரிக்கப்படுவதும் குறையலாம் [விதிவிலக்கு எப்போதும் இலங்கைக்குண்டு] களவு செய்பவர்களை சிறையில் அடைக்க நீதிபதி அப்புக்காத்து என்று எவரும் தேவைப்படாது. இனி இந்த அப்ஸ்மட்டும் போதுமாகலாம். இந்த கொரோனா [ 2020 –2021] காலப்பகுதியில் நீங்கள் நஷ்ட ஈடுக்கு பணம்பெறக் தவறுதலாகக் கொடுத்த தரவுகள் உங்களுக்கு இதுபோன்ற அப்ஸ்சுகள் ஆப்பும் வைக்கலாம். உருவம் இல்லாதா கொரோனா போல் காவல் காரர்களும் உங்களைச்சுற்றி வலம்வரலாம். அப்பனுக்கும் ஆத்தைக்கும் ஏன் காதலிக்கும் காதலனுக்கும் உங்களைப் பற்றி தெரியாவிட்டாலும் இந்த அப்ஸ்சுக்கு[Apps] உங்களை அக்குவேறு ஆணிவேறாகப் தெரிந்திருக்கும்.

இந்த அப்ஸ் மட்டும் இருந்திருந்தால் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டருக்கு முன்னால் தொலைந்த என் சைக்கிள் திருடனுக்கு இன்றும் ஆப்புவைக்கலாம். ஆனால் உங்கள் காதலன் காதலி காணமல் போய்யிருந்தால்! எந்த ஆப்சாலும் ஆப்புவைக்முடியாது. காரணம் இப்போது காதலுக்கு எல்லாம் எவரும் ஆப்புவைப்பதில்லை. அவர்கள் தமக்குதாமே மகிழ்வோடு வைத்துக்கொள்கிறார்கள் ஆப்பு!







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# திருமந்திரமும் வாழ்வியலும்

52

## திருமந்திரப் பாடல்களில் பரிபாசை – மறைபொருள் கூற்று (2)

சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி

திருமூலநாயனாரின் பரிபாசை அதாவது மறைபொருள் கூற்றுக்கு உதாரணமாக பின்வரும் திருமந்திரப் பாடல் எண் 2122 ஐயும் பார்ப்போமானால்

**காயப்பை ஒன்று சரக்கு பல உள**
**மாயப்பை ஒன்றுஉண்டு**
**மற்றுமோர் பைஉண்டு காயப்பைக்குள்**
**நின்ற கள்வன் புறப்பட்டால்**
**மாயப்பை மண்ணாய் மயங்கியவாறே**

உடம்பாகிய இந்தக் கோணிப்பைக்குள் பலவகையான சரக்குகள் [எலும்பு, சதை, இரத்தம், அல்லது ஆணவம், சினம் என்னும் குணங்கள்] உள்ளன. இந்தப் பைக்குள் இன்னொரு பை [மாயப்பை – கண்ணுக்குப் புலப்படாது மறைந்திருக்கும் வினைப்பை] உள்ளது. மற்றுமோர் பை [மனம், உணர்வு முதலியனவற்றைக் கருவியாகக் கொண்டு உடம்பை இயக்கும் பை]. இந்த உடம்பாகிய பைக்குள் இருக்கின்ற கள்வனாகிய உயிர் புறப்பட்டுப் போய்விட்டால், காயப்பையும், மாயப்பையும், மண்ணில் கலந்து மறைந்துவிடும்.

விழலுக்கு நீர்ப்பாச்ச நினையாதீர் எனக் கூறும் பாடல் எண் 2873

**ஏற்றம் இரண்டுஉள ஏழு துரவுள**
**மூத்தாள் இறைக்க இளையாள்**
**படுத்தநீர் பாத்தியில் பாயாது**
**பாழ்ப்பாய்ந்து போயிடில்**
**கூத்தி வளர்த்ததோர் கோழிப் புள்ளாமே**

இப்பாடலின் கருத்தை மேலோட்டமாகப் பார்த்தால் ஏழு கிணற்றில் இருந்து இரண்டு ஏற்றங்கள் வளியாக மூத்தவள் கீழிறக்க, இளையவள் மேல் ஏற்றிய நீரை பாத்தியில் பாய விடாது பாழ் நிலத்தில் பாச்சுவது விலை மகள் வளர்த்த கோழிக் குஞ்சு போலாகும் எனத்தான் இப்பாடலின் பொருளை நாம் கொள்வோம். ஆனால் திருமூலரின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. அதாவது மறைபொருளாக இப்பாடலின் பொருள் ஏற்றம் இரண்டு என்பது வலப்பக்கநாடி, இடப்பக்கநாடி வழியாக வந்து போகும் மூச்சு. ஏழு துரவு [கிணறு] என்பது மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, ஆகிய ஆறு ஆதாரங்களுடன் உச்சித் தொளையாகிய சகஸ்ரதளமும் சேர்ந்து ஏழாகும். மூத்தாள் இறைக்க என்பது மூத்தவளான இடப்பக்க நாடியான சந்திரகலை வழியாக மூச்சை உள்இழுக்கும் மூச்சு. இளையாள் படுத்தநீர் என்பது இளையவள் என்று சொல்லப்பட்ட வலப்பக்க நாடியான பிங்கலை [சூரியகலை] வழியாக வெளிவரும் மூச்சு. இரண்டும் நடு நாடியாகிய பாத்தியில் பொருந்தி [பாய்ந்து] நிற்கச் செய்யாமல் அதாவது பூரகம் [உள்ளுக்கு இழுத்தல்], இரேசகம் [வெளிவிடுதல்], கும்பகம் [அடக்குதல்] வீணாக வெளியேறச் செய்வார்களானால் இது பாழ் நிலத்தில் பாச்சும் நீர் போலாகும். இது விலைமகள் வளர்த்த கோழிக்குஞ்சு போல காம இச்சைக்குப் பலியாகிக் கலங்கி நிற்கும். அதாவது உயிர்த் துணையாக நின்று உதவாது என்பது கருத்து.

ஞான உழவு நன்செய் விளைவு எனக் கூறும் பாடல் எண் 2872

**மூவனை ஏரு உழுவது முக்காணி**
**தாமணி கோலி தறிஉறப் பாய்ந்திடும்**
**நாவணை கோலி நடுவில் செறுஉழார்**
**கால்அணை கோலிக் களர் உழுவாரே**

இடகலை, பிங்கலை, சுழுமுனை என்று மூன்றின் வழி இயங்கும் பிராணன் என்னும் உயிர் மூச்சு ஏர் ஆக, முக்கோண வடிவாக உள்ள மூலாதாரமாகிய நிலத்தில் உழவு நடைபெறும். உழுதபிறகு, முதுகுத் தண்டான கயிற்றால் கட்டப்பட்டு, சுழுமுனையில் நினைவு பொருந்த சிவ உணர்வில் திளைத்து, நாக்குக்கு மேல் தொண்டைக் குழிக்குள், சிவானந்த தேனமுதம் விளையும் ஞானத் தவம் செய்ய முடியாதவர்கள், மூச்சினை அடக்கி மோனத்தவம் என்னும் களர் நிலத்தை [விளையாத களிமண் நிலத்தை] உழுது பயிர் விளைவிக்க முயலுவோர் ஆவர்.

பால் தராது பட்டிப் பசு எனக் கூறும் பாடல் எண் 2874

**பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுஉள**
**குட்டிப் பசுக்கள் ஓர்ஏழுள ஐந்துள**
**குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்**
**பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே**

மேய்ப்பவர் இன்றித் திரியும் பட்டிப் பசுக்கள் [பால் கறக்காத பசு, பட்டிமாடு] இருபத்து நாலு என்பது ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கையும், குட்டிப் பசுக்கள் ஏழும், ஐந்தும் என்பது வித்தியா தத்துவம் ஏழும், சிவ தத்துவம் ஐந்துமாகும். குட்டிப் பசுக்கள் குடம் குடமாகப் பால் சொரிந்தாலும் ஒரு பயனும் இல்லாத வறட்டுப் பசுவே ஆன்மாவுக்கு அமைந்தது. சீவாத்துமாக்கள் பால் தரும் குட்டிப் பசுவைத் தேடாமல், புறநாட்டம் என்னும் பட்டிப் பசுவை [பால் தராத வறட்டுப் பசுவை] கட்டி அழுவதைக் கேலி செய்யும் மந்திரம் இது.

ஆன்மப் பசுவை அலைய விடாதீர் எனக் கூறும் பாடல் எண் 2875

**ஈற்றுப் பசுக்கள் இருபத்து நாலுள**
**ஊற்றுப் பசுக்கள் ஒருகுடம் பால்போதும்**
**காற்றுப் பசுக்கள் கறந்துண்ணும் காலத்து**
**மாற்றுப் பசுக்கள்வரவு அறியோமே**

ஈற்றுப் பசுக்கள் [பால்வற்றிப் போன பசுக்கள், பால் தராத பசுக்கள்] இருபத்து நான்கு உள்ளன என்பது ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கைக் குறிக்கின்றன. ஆனால் ஆன்மாவிற்குப் பால் ஊறும் பசுக்கள் தரும் ஒரு குடம் பாலே போதுமானது. என்பது ஊற்றுப் போல ஒளி வீசும் சிவ தத்துவத்தைக் குறிக்கிறது. இது தெரியாமல் காற்றுப் பசுக்களாகிய இடப்பக்கம், வலப்பக்கம் மூக்கு வழியாக வந்து போகும் காற்றைச் சுவாசித்து வாழும் காலத்தில் [உலகில் வாழும் போது] மாற்றுப் பசுக்களான புலனிச்சைகள் நம்மில் பொருந்த, நாம் அதன் வழிச்சென்று, வாழ்வைப் பாழாக்கிக் கொள்வதை உணராமல் இருக்கின்றோமே! அறியாமை அல்லவா இது? என்பது குறிப்பு.

சீவனுக்குரிய இடம் சிவதளம் எனக் கூறும் பாடல் எண் 2876

**தட்டான் அகத்தில் தலையான மச்சின்மேல்**
**மொட்டாய் எழுந்தது செம்பால் மலர்ந்தது**
**வட்டம் படவேண்டி வாய்மை மடிந்திட்டுத்**
**தட்டான் தனைத் தகைந்து கொண்டானே**

உயிர் [சீவன், தட்டான்] உள்ளத்துள் பொருந்த இடம் தருவது உடம்பு. இதன் உச்சியில் மேலே [மச்சு, வீட்டின் உயர்ந்த இடம்] அதாவது உச்சித் தலையில் [ஆயிரம் இதழ் தாமரை சகஸ்ரதளம்] செழுமையான, சிவந்த மொட்டுப்போல் தோன்றி, மலர்ந்து வட்ட வடிவமாக ஓம் என்னும் பிரணவ ஒளியாகி, நமசிவாய என்னும் மெய்யான ஐந்தெழுத்தோடு கலந்து, அதனைத் தன்னிடமாகக் கொண்டுவிட்டது.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகையின் 'திருமுகம் காணும் திருவிழா'








**இயல்பு நிலை திரும்பும்போது நாம் முற்றாகக் கரைந்து போகாமல் இருப்பதற்கான ஒரு முயற்சி இது!**

ஞாயிற்றுக்கிழமை 19.07.2020 அன்று ஜேர்மனி டோட்முண்ட் நகரில் தமிழர் அரங்கத்தில் வெற்றிமணிப் பத்திரிகை, வெற்றிமணியோடு இணைந்து பயணித்த படைப்பாளிகளையும் சக ஊடகவியலாளர்களையும் சந்தித்து அவர்களின் திருமுகத்தை நேருக்கு நேர் கண்டு கதைத்து மகிழ்வதற்காக திருமுகம் காணும் திருவிழாவை சிறப்பாக நடத்தி மகிழ்ந்தது.

கோவிட் –19 இன் பிறப்பும், அதன் வேகமான வளர்ச்சியும் கொடிய நிழலாக உலகை ஆக்கிரமித்து நின்றதால், கூடிக்குலாவி சிரித்து மகிழ்ந்தவர்களே ஒருவரையொருவர் அந்நியர்களாக பார்த்து எதிரெதிரே சந்தித்தபோது கூட ஒருவரை ஒருவர் பார்க்காது விலகிச் சென்றமை, மனித மனங்கள் சந்திப்புகளில் ஏற்படும் மகிழ்ச்சி என்ற ஈரப்பதன் காய்ந்து தரிசு நிலமாகிக் கொண்டிருந்த வேளையில் இவ்வொன்றுகூடல் திருமுகம் காணும் திருவிழா இடம்பெற்றது மகிழ்ச்சியைத் தந்தது.

திருமுகம் காணும் திருவிழா மனித மனங்களை தூர விலகிப் போகாமல், கோவிட்– 19 தாக்கத்தில் கரைந்து போதலை தடுத்து நிறுத்தும் நடவடிக்கையாக இவ்வொன்றுகூடல் இடம்பெற்றுள்ளமை நிம்மதியைத் தந்துள்ளது. நான்கு மாதங்கள் நடைபெறாதிருந்த பொதுநிகழ்வின் ஆரம்பமாக இவ்வொன்றுகூடலைக் குறிப்பிடலாம்.

வெற்றிமணி ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் தனது முன்னுரையில் திருமுகம் காணும் திருவிழாவின் அவசியத்தை எடுத்துரைத்தார். நாம் இன்று பலவற்றை இயல்பு நிலை இது என்று எண்ணிக்கொண்டு வேறு ஒரு உலகில் வாழ்கின்றோம். ஆனால் உண்மையில் இயல்பு நிலை திரும்பும்போது நாம் மீண்டும் எமது நிலைக்கு வராமல் கரைந்து போய் விடுவோம். அந்தக் கரைதலைத் தடுப்பதற்கான ஒரு சிறு முயற்சியே இந்த திருமுகம் காணும் திருவிழா.இவ்வாறு தனது முதலுரையில் தெருவித்தார். அத்துடன் வந்தவர்களுக்கும் அரங்கினை இலவசமாகத் தந்து உதவிய திரு. சபேசன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

திருமுகம் காட்டி மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்ள வந்த ஏலையா க.முருகதாசன்,தமிழருவி வானொலி திரு.நயினை விஜயன், தமிழ் ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியர் திரு.செ.தவா, வெற்றிமணி எழுத்தாளர் திருமதி. கரிணி.கண்ணன், எழுத்தாளர் திரு.சபேசன், எழுத்தாளர் திரு.நெடுந்திவு முகிலன் எழுத்தாளர் சுப்பிரமணியம் ஆகியோர் ஒன்றுகூடலின் அவசியத்தை அவர்களாற்றிய சிற்றுரையில் வெளிப்படுத்தினர்.

திரு.சக்திவேல் திருமுகத் திருவிழாவை நெறிப்படுத்தியும் அறிவிப்பாளராகவும் தம்பணி சிறக்கச் செய்தார்.

இத்திருவிழாவில் வெற்றிமணியின் தயாரிப்பான 'என்னவளும் சீதையே' என்ற நல்ல கதையம்சம் கொண்ட குறும்படம் மகாஜனாவின் முன்னாள் அதிபர் திரு.பொ. கனகசபாபதி அவர்களுக்கான சமர்ப்பணத்துடன் திரையப்பட்டதுடன்



இப்படத்தை எல்லோரும் மனம் இலயத்து மகிழ்ந்தனர். கோப்பி சிற்றுண்டி என நாவிற்கு சுவையளித்து திருமுகப் புன்முறுவலுடன் ஒன்றுகூடல் நிறைவு பெற்றது.

**ஏலையா. க.முருகதாசன்**









டோட்முண்ட் மாநகரில்...
தமிழர் அரங்கம்

தமிழ் மொழி வகுப்புகள்
தமிழ் மொழி வகுப்புகள் இலவசம்!
ஐரோப்பாவில் பிறந்த தமிழ் மொழியைக் கற்காது வளர்ந்த பிள்ளைகளுக்கும் பிரத்தியேக முறையில் பயிற்றுவிக்கப்படும்.

கீ போர்ட் மற்றும் வயலின் வகுப்புகள் வெகு விரைவில் ஆரம்பம்!

யேர்மன் மொழி வகுப்புகள்
அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப்படுகிறது.
யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்லதோர் அரிய வாய்ப்பு

பரதநாட்டிய வகுப்புகள்

(Bollywood) நடன வகுப்புகள்

வீணை வகுப்புகள்



Rheinische str. 76-80, 44137 Dortmund | 0151 633 633 33 | 0231 95097900

பி.விக்னேஸ்வரன்



# உண்மையான ஊடகவியலாளராக

## உங்களுக்கு சில குறிப்புகள்!

நான் எனது ஊடகத்தொழில் வாழ்க்கையின்போது பல பயிற்சி நெறிகளில் பங்குபற்றியதால் ஊடகத்துறை பற்றிய பயிற்சிகளில் எனக்கு மிகுந்த ஈடுபாடும் நம்பிக்கையும் இருக்கிறது. குறிப்பாக, ஊடகப் பயிற்சியளிப்பதில் சர்வதேச ரீதியாக அறியப்பட்ட ஈழத் தமிழ் ஊடகவியலாளர் காலம்சென்ற சீ.வீ. இராஜசுந்தரம் அவர்களுடன் அடிக்கடி ஊடக விடயங்கள்பற்றிப் பேசியதால் ஊடகப்பயிற்சியில் மிகுந்த ஈடுபாடுடையவனாக, இலங்கையிலும் ரொறன்ரோவிலும் ஊடகப் பயில் அரங்குகளை நடத்தி, பல இளைஞர்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறேன். அதையறிந்த சிலர் என்னிடம் ஊடகப்பயிற்சி பற்றி பேசுவதுண்டு. அத்தகையவர்களில் ஒருவர் என்னைச் சந்தித்தபோது, அண்மையில் ஒரு கோப்பிக் கடையில் இருவரும் இருந்து பேசியதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அவர் தான் சிறுவயதுமுதலே ஊடகத்துறைக்குள் செல்லவேண்டுமென்று ஆவலாக இருந்ததாகவும் நாட்டின் யுத்த நிலமை காரணமாகப் புலம்பெயர்ந்துவந்து தன்னையும் தன் குடும்பத்தினரையும் நிலைநிறுத்துவதிலேயே தனது வாழ்க்கையைச் செலவழித்துவிட்டதாகவும், இப்போது தனது சுமைகள் குறைந்த நிலையில் தன்னுடைய இளவயது ஆசையை நிறைவேற்றலாமென்று பார்க்கிறேன் என்று கூறினார்.

ஊடகத்துறையைத் தொழிலாகக் கொள்ளப்போகிறீர்களா? என்று சற்று வியப்புடன் கேட்டேன். அவருக்கு ஐம்பதைக் கடந்த வயதிருக்குமென்று நினைக்கிறேன்.அவர் உடனே, தமிழர்கள் இங்கே ஊடகத்துறையைத் தொழிலாகக் கொள்ள முடியாதென்று எனக்குத் தெரியும். ஆனால் அதை ஒரு சேவையாகச் செய்யலாமென்பது என் எண்ணம் என்று சொன்னார். நீங்கள் என்னவிதமான உதவியை என்னிடம் எதிர்பார்க்கிறீர்கள்? என்றேன். தான் ஒரு செய்தியாளராக வரவேண்டுமென்றும் அது பத்திரிகையோ வானொலி, தொலைக்காட்சிபோன்ற இலத்திரனியல் ஊடகங்களோ அல்லது வலைத்தள ஊடகங்களோ எதுவாக இருந்தாலும் பரவாயில்லை, அதற்கு என்ன செய்யலா மென்று கேட்டார். அதுபற்றிய கற்கை நெறிகள் இங்கே பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் [college] இருக்கின்றன. இங்கு எந்த வயதிலும் படிக்கலாம். ஆனால் உங்களுக்குப் பல்கலைக் கழகம் போவது சிரமமாக இருக்குமென்று நினைக்கிறேன். கல்லூரிகளில் இதற்கான வகுப்புகளில் சேரலாம் என்றேன். அதற்கு அவர், ஆங்கிலத்தில் கற்பது தனக்கு சிரமமானதென்றும் சிறிது வழி காட்டலிருந்தால் தானாகவே கற்றுக் கொள்ளமுடியுமென்ற நம்பிக்கை இருப்பதாகவும், அதனால்தான் உங்கள் உதவியை நாடினேன் என்றார். இன்றைய நிலையில் அவர் ஒரு கைத் தொலைபேசியைத் தூக்கிக் கொண்டோ அல்லது இணையத் தளங்களில் பத்திரிகையென்று சொல்லி ஏதாவது ஆரம்பித்து, மனம்போன போக்கில் எதையாவது எழுதி தனது ஊடகவியலாளர் கனவை நனவாக்கிக் கொள்ளலாம். இருந்தபோதிலும் கற்றுக் கொள்ளவேண்டுமென்று அவர் விருப்பம் தெரிவித்தமை நிச்சியமாக அவர் ஊடகத்துறையை ஓரளவாவது மதிக்கும் ஒருவர் என்று எனக்குப் புரிந்தது.



அவருடன் சற்றுப் பரிவோடு பேசினேன். சரி, ஊடகவியலாளர் என்பவர் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்று அவரைக் கேட்டேன். ஒரு நடுநிலையாளராக இருக்கவேண்டுமென்று சொல்வார்கள் என்று கூறினார். நல்லது, அதற்குப் பிறகு வருகிறேன் என்று சொல்லிவிட்டு, அவருக்கு நான் கூறிய முதல் விடயம், பத்திரிகையோ மற்றும் எந்த ஊடகங்களாகவோ இருந்தாலும் அவற்றில் ஒரு செய்தியாளராக வருவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்கத் தயாராக இருக்கவேண்டும். அதைவிட முக்கியமான விடயம், நீங்கள் அடிப்படையில் நேர்மையான மனிதராக இருக்கவேண்டுமென்று கூறினேன். அவருக்கு அப்படி நான் ஏன் கூறுகிறேன் என்பது புரியவில்லை. மேலும் விளக்கினேன். தற்கால நிலையில் விரும்புபவர்கள் எவராயினும் ஊடகவியலாளராகலாம். ஆனால் நேர்மையான ஒருவர்தான சிறந்த ஊடகவியலாளராகப் பிரகாசிக்கமுடியும்.

ஒரு சிறந்த மனிதனால்தான் சிறந்த ஊடகவியலாளனாகப் பிரகாசிக்கமுடியும். சகலவற்றையும் சார்பற்ற நிலையில் இருந்து பார்ப்பது ஒரு பண்பட்ட ஆன்மீக நிலை. அவர்களால்தான் உண்மையைத் தரிசிக்க முடியும் என்று சொன்னேன். செய்தியென்றால் என்ன, செய்தியை எப்படித் தேடுவது, எப்படித் தெரிந்தெடுப்பது, செய்தி எழுதும் மொழிநடை மற்றும் நுட்பங்களை ஒருவர் ஒன்று இரண்டு வருடப் பயிற்சியின்மூலம் கற்றுக்கொள்ளலாம். அப்படிக் கற்றுக்கொண்டாலும் உங்களிடம் நேர்மை இல்லையெனில் நீங்கள் கற்றுக் கொண்டவற்றால் எந்தப் பிரயோசனமும் இல்லை. வள்ளுவர் கூறுவதுபோல் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அற்ற அறத்தைப் பேணுபவராக நீங்கள் இருக்கவேண்டும். வெகுளிகூட [கோபம்] அநீதியைக்கண்டு ஏற்படுமானால் அது அவசியமானதே. ஆனால் அந்த வெகுளியை ஆக்கபூர்வமாகக் கையாளத் தெரிந்திருக்கவேண்டும். அழுக்காறும் அவாவும்கொண்ட ஒருவனால் நேர்மையான ஊடகவியலாளனாக ஒருபோதுமே செயற்பட முடியாதென்று சொன்னவுடன் அந்த அன்பர் நீங்கள் என்னை ஒரு சாமியாராகச் சொல்கிறீர்களா? என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

26 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

உண்மைதான், விருப்பு வெறுப்பற்று சகலவற்றையும் சமமாகப் பார்க்கக்கூடியவர்கள்தான் உண்மையான துறவிகள் என்றால், ஊடகவியலாளர்களும் துறவிகளே. எல்லா மனிதர்களுக்குள்ளும் நல்லது கெட்டது இரண்டும் இருக்கின்றன. கெட்ட எண்ணங்கள் தலைதூக்கும்போது நாம் நிதானித்து அதை அடக்கப் பழகிக்கொண்டால் நல்ல எண்ணங்கள் மேலோங்கும். இதை நீங்கள் அன்றாட வாழ்க்கையில் பயின்றுவந்தால் நல்ல மனிதனாகலாம், சுலபமாக சிறந்த ஊடகவியலாளர் என்ற பெயரையும் எடுக்கலாம் என்று சொல்லிவிட்டு, இப்போது நீங்கள் முதலில் சொன்ன நடுநிலைக்கு வருவோம் என்று தொடர்ந்தேன்.

சார்பற்ற அணுகுமுறைதான் நடுநிலையென்று கூறப்படுகிறது. ஊடகவியலாளர்கள் நடுநிலை பேணவேண்டுமென்று பொதுவாகச் சொல்லப்படுகின்றபோதிலும் இந்த நடுநிலையென்பது மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒன்றாக இருப்பதையே நாம் அவதானிக்க முடிகிறது. நடுநிலையென்பது எந்தப் பக்கம் என்றில்லாமல் நடுவில் இருப்பது என்ற அர்த்தத்தில்தான் பெரும்பாலும் பேசப்படுகிறது. நீதிமன்றத்திலே வழக்கை விசாரித்துத் தீர்ப்புச் சொல்பவரை நடுவர் என்கிறோம். ஒரு போட்டியில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பவர்களை நடுவர்கள் என்கிறோம். இவர்கள், நாங்கள் நடுநிலை வகிப்பவர்கள், எந்தப்பக்கமும் சாரக்கூடாதென்று நினைத்து செயற்பட்டால் நீதியை யார் நிலைநாட்டுவது, வெற்றியாளர்களை யார் தீர்மானிப்பது? உண்மையில் நடுநிலை அல்லது சார்பற்ற தன்மையென்பது ஒரு விடயத்தை அணுகுவதற்கு முதல் இருக்கவேண்டிய மனநிலை. எந்தவொரு விடயத்தையும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட மனநிலையில், தனது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம்கொடுத்து அணுகும் ஒருவரால் உண்மையைக் கண்டறிய இயலாது. எனவேதான் ஊடகவியலாளர்கள் நடுநிலையோடு ஒரு விடயத்தை அணுகவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

நடுநிலையென்பது அந்தப்பக்கமும் இல்லாமல் இந்தப்பக்கமும் இல்லாமல் நடுவில் நிற்பது என்று விளக்க முற்படுவது உள்நோக்கம்கொண்ட கபடத்தனமான செயல். இலங்கை நாடாளுமன்றக் குழறுபடிகளில் எந்தவொரு அணியையும் ஆதரிக்காது தான் நடுநிலை வகிப்பதாக ஒரு தமிழ் அரசியல்வாதி சொன்னதாக ஒரு பத்திரிகையில் படித்தேன். அந்தச் செய்தி உண்மையெனில், அந்த அரசியல்வாதிபோன்ற பச்சோந்தி இருக்க முடியாது. சாதாரணமான ஒரு மனிதனுக்குக்கூட எந்தப் பக்கத்தில் நியாயம் இருக்கிறதென்பது சுலபமாகப் புரிந்துவிடும். நியாயமுள்ள பக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதே நேர்மையான ஒருவர் செய்யக்கூடிய செயல். அப்படி இருந்துவிட்டால் பிரச்சனை தீர்ந்தபின் வெல்லும் பக்கத்தில் நின்று தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்ளலாமென்பதே அவரது



எண்ணமாக இருக்கும். உண்மையில் இரண்டு பக்கமும் சாராமல் இருப்பதென்பதற்கு இரண்டு பக்கமுமே பிழையானவையென்பதுதான் அர்த்தம். நேர்மையான ஒருவரால் ஒருபோதுமே அந்த இரண்;டு பக்கத்துடனும் சார்ந்துபோக முடியாது. நியாயத்தின பக்கம் நிற்பவர் ஊடகவியலாளர்.

நேர்மையாக இருந்துவிட்டால் மட்டும் ஓர் ஊடகவியலாளராகிவிட முடியுமா என்று அன்பர் கேட்டார். நேர்மையாக இருப்பதென்பது ஓர் ஊடகவியலாளருடைய அடிப்படைத் தகைமை. மேலும் சில நடைமுறைகளைப் பின்பற்று வதன்மூலம் ஒரு சிறந்த ஊடகவியலாளராக முடியுமென்று கூறி அந்த நடை முறைகளை விளக்கினேன்.

**01.** ஒரு பத்திரிகையாளராகவோ வேறு எந்த ஊடகவியலாளராகவோ இருப்பவர்களுக்குச் சமூகத்தில் ஒரு கௌரவம் கிடைக்கிறது. இது ஊடகத்துறை காலம்காலமாக மனித சமுதாயத்துக்கு ஆற்றுகின்ற சேவை காரணமாக மக்களிடையே இயல்பாக ஏற்படுகின்ற ஒரு மரியாதை. புதிதாக ஊடகத்துறைக்குள் வரும் ஒருவர் மக்கள் தரும் இந்த மரியாதையைத் தனக்குத் தரும் மரியாதையாகக் கருதி ஆணவம்கொண்டு தலைவீங்கி அலையக்கூடாது. தமக்குரிய கௌரவத்தை சமூகத்திடமிருந்து பெறுவதற்குக் கடுமையாக உழைக்கவேண்டும்.

**02.**ஊடகவியலாளரென்ற கௌரவத்தைச் சம்பாதிப்பதற்கு ஒருவன் மக்களுக்கு எப்போதுமே உண்மையைத்தான் சொல்லுவேன் என்று உறுதியெடுத்துக்கொள்ளவேண்டும். பரபரப்புக்காகவோ உள்நோக்கம் கொண்டு மக்களை வேண்டுமென்றே திசைதிருப்புவதற்காகவோ செய்திகளைக் கொடுப்பவர்கள் உடனடியாக மக்களின் கவனத்தைப் பெற்றாலும் காலப்போக்கில் ஊடகவியலாளர்களுக்குரிய கௌரவத்தைப் பெறமாட்டார்கள்.

**03.**யாராவது அல்லது எந்தத் தரப்பாவது உங்களை அணுகி ஒன்றைச் சொன்னால் குறிப்பாக வேறு ஒரு நபர் பற்றியதாகவோ அல்லது தரப்புப் பற்றியதாகவோ அது இருக்குமானால் அதை அப்படியே நம்பி அல்லது அதை நம்புவதால் வரும் நன்மைகளைக் கருதி அந்த நபருக்கோ தரப்புக்கோ சார்பாக எதையும் பொதுமக்களிடம் கொண்டுசென்றுவிடக்கூடாது. ஏனெனில், இப்படி முதலில் வந்து தகவல்களைத் தருபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதமானவர்கள் தீய உள்நோக்கம் கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஊடகவியலாளராக உங்கள் கடமை குற்றம் சாட்டப்பட்ட நபரையோ தரப்பையோ அணுகித் தீரவிசாரித்து உண்மையைக் கண்டறிந்தபின் மக்களிடம் கொண்டுசெல்வதே ஆகும்.

**04.**சொந்த விருப்பு வெறுப்புகள் ஒருபோதும் உங்களது ஊடகப் பணியில் பிரதிபலித்தலாகாது. தனக்கு விருப்பமில்லாதவர்களது செய்தியையோ படங்களையோ பிரசுரிக்காமல் விடுவதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான விடயங்கள் உங்கள் பழிவாங்கும் உணர்ச்சியைத் திருப்திப்படுத்தலாம். ஆனால் உங்களுக்கு உண்மையான ஊடகவியலாளர் என்ற அந்தஸ்தை ஒருபோதும் தரமாட்டாது. ஊடகங்கள் மலிந்துவிட்ட இந்தக் காலகட்டத்தில் நீங்கள் மறைப்பதால்மட்டும் எதையும் இருட்டடிப்புச் செய்துவிட முடியாது.

**05.**ஒரு விடயத்திற்கு எத்தனை விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றனவோ அத்தனையையும் மக்கள் முன் கொண்டுசெல்லுங்கள். மக்களைச் சரியாக வழிநடத்துகின்றேன் என்ற போர்வையில் உங்களுக்கு ஏற்புடையதை மட்டுமே மக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. சர்வாதிகாரத்தின் முதல்நிலையே மக்களுக்கு உங்களால் தெரிவுசெய்யப்பட்ட செய்தியை மட்டுமே கொடுப்பதுதான்.

**06.**ஓர் ஊடகவியலாளராக இருப்பவர் பொது இடங்களில் அரசியல் பேசியோ அல்லது வேறெந்த விடயங்களிலோ தனது நிலைப்பாட்டை அல்லது அபிப்பிராயத்தைப் பொதுமக்கள் அறியக்கூடியதாக வெளியிடக்கூடாது. அப்படி இன்னாரென்று இனங்காணப்படமுடியாதவராக ஓர் ஊடகவியலாளர் இருக்கும்போது அவரதுசெய்திகளுக்குநம்பகத்தன்மை அதிகம் இருக்கும்.

இந்த ஆறு விடயங்களையும் நேர்மையான ஓர் ஊடகவியலாளர் கடைப்பிடித்தால் அவர் நிச்சயமாகத் தான் பணிபுரியும் சமூகத்தினர் மத்தியில் ஒரு சிறந்த ஊடகவியலாளராகப் பிரகாசிக்க முடியும். நான் மேலே கூறியவற்றைக்கேட்ட அந்த அன்பர் தெளிவுபெற்றவராக விடைபெற்றுச் சென்றார். அவர் ஒரு சிறந்த ஊடகவியலாளராக வருவது இனி அவர் கையில்தான் இருக்கிறது.

நன்றி: தமிழர் தகவல் கனடா




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

வித்தியாசத்தில்தான் அவரால் பாராளுமன்ற ஆசனத்தைத் தக்கவைக்க முடிந்தது. இந்தமுறை சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தனியாக யாழ்ப்பாணத்திலும் களம் இறங்கியுள்ள நிலையில் விஜயகலாவின் எதிர்காலம் கேள்விக்குறியாகியிருக்கின்றது. அங்கஜன் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டாலும் இது மொட்டு அணிதான். கடந்த முறை தோல்வி கண்ட பிறகு தேசிய பட்டியல் மூலம் வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், இந்த முறை எப்படியும் வெற்றி பெற்றே வர வேண்டும் என்ற வேகத்தில் பணத்தை தண்ணீராக இறைத்து கடுமையான பரப்புரைகளை அங்கஜன் முன்னெடுத்து வருகின்றார். அவரது கட்சியைச் சேர்ந்த விண்ணன் போன்றவர்களும் வெற்றியை நோக்கி கடுமையாக உழைக்கின்றார்கள். அதனால், இவர்கள் தரப்பு ஒரு ஆசனத்தையாவது பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணத் தகவல்கள் சொல்கின்றன.

இவற்றைவிட்டால், தமிழ்த் தேசியத்தை கொள்கையாக வெளிப்படுத்தும் மூன்று அணிகளுக்குள் கடும் போட்டி உள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பனவே அவை. தமிழ் மக்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்ற கூட்டமைப்பின் தொடர்ச்சியான பிம்பம் இந்தத் தேர்தலில் உடைக்கப்படுமா என்ற கேள்வி முக்கியமாக எழுகின்றது. ஆனால், அதிகளவு ஆசனங்களைப் பெறப்போகும் கட்சியாக கூட்டமைப்பே இருக்கப்போகின்றது என்பதை வடக்கு கிழக்கு தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி வி விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பு இந்த தேர்தலில் முதன்முதலாக களமிறங்கியிருக்கின்றது. கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு புதிய தமிழ் தலைமையை உருவாக்க வேண்டும் என்ற இலக்குடன் தான் விக்கினேஸ்வரனின் தலைமையிலான கூட்டணி இந்த முறை தேர்தல் களத்தில் குதித்து இருக்கின்றது. விக்னேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி மாற்றுத் தலைமையை உருவாக்குமா என்ற கேள்விக்குறி இந்த முறை வடக்கு கிழக்கு தேர்தல் களத்தை பரபரப்பாகி இருக்கின்றது என்பது உண்மை.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை பொறுத்தவரையில் மாற்று அணி அல்லது மாற்று தலைமை



ஒன்றுக்காண சாத்தியமில்லை என்பது தான் அவருடைய நிலைப்பாடு. தமிழ் தேசியக் கூட்டமைப்பு 20 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையுடனேயே தாம் செயற்ப்படுவதாக திருமலையில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் சம்பந்தன் கூறியிருக்கின்றார். கடந்த தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு 16 ஆசனங்களைப் பெற்றிருந்தது இந்த முறை அதற்கு மேலதிகமாக அவர்களால் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்குமா என்பது முக்கியமான கேள்வி.

அதேவேளையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மாற்றுத் தலைமைக்கான தகுதி தம்மிடமே இருக்கின்றது என்ற பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றது. கூட்டமைப்புக்கு அடுத்ததாக பலம் வாய்ந்த கட்சியாக தமது அணி தான் இருக்கின்றது என்ற பரப்புரையை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்து வருகின்றார். கடந்த வருடம் பிப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தமிழ் தேசிய மக்கள் முன்னணி இரண்டாவது பலம் வாய்ந்த ஒரு கட்சியாக வெளிப்பட்டு இருந்தது என்பது அவரது நம்பீக்கைக்குக் காரணம்.

வடக்கே கிழக்கு உள்ள நிலைமைகளை பார்க்கும்போது தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிக ஆசனங்களை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதிலும் கூட்டமைப்பின் முக்கியமான தலைவர்கள் சிலருக்கு இந்தத் தேர்தல் கடுமையான ஒரு சவாலாக அமையும். அதேவேளை மாற்று தலைமை ஒன்றை உருவாக்குவதற்குத் தேவையான ஆசனங்களை பெற்றுக் கொள்ளப் போகும் அணியாக விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி உருவாகுமா அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினர் உருவாகுவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இரண்டு தரப்பினருமே அந்த நம்பிக்கயுடன்தான் இருக்கின்றார்கள்.

21 Page Continu...

participate in the socio, religious and cultural activities. Therefore, the scarcely get depressed even when they are is lockdown or curfew declared for many days and months. By following such healthy, cultural activities with some good mental practices and make it as a routine in life will supress the fast and vast spreading of such viruses.

People should accept the fact this is the right time to think deeply and reflect about the priorities in their life and their lifestyle. Majority of the people now spend time in looking after themselves as well as their families. They are happy to spend more time with their loved ones. Every individual can thus make use of this time to develop in some way - learn a new skill, learn a new language, get involved in physical activities, such



as walking, jogging, doing physical and yoga exercises.

People now follow various ways to get rid of depression during this pandemic. Those who are not engaged in any activities are depressed and undergoing stress and strain. Many people now spend their time meaningfully by reading, drawing, learn music and play musical instruments or get engaged in writing the book they have always wanted to write. Others are engaged in being engaged in hobbies, making handy crafts, reading, films and home improvements. By exchanging their views with family members would one can get clarity in thinking and help in building a better strategy. Another strategy is maintaining routine activities by having a daily plan. While working from home, it is important for the family members to build a productive routine, to engage in activities like singing, doing meditation, spending time with their pets, playing indoor games, staying calm etc.,

The lockdown has wiped out almost all our negligence of ourselves as well as our families. Even though people have been affected financially, they have now experimented to live economically. The globe now follows the digital technology. As a result, working, learning and communicating and conducting conferences are conducted through online. Also having access to news and social media to get updates and information regarding the current situation and awareness activities through online has become a routine activity.

The coronavirus crisis has changed the world completely in the last few months. While a negative psychological effect is unsurprising during the period of quarantine, the globe is shocked to note that the Hindu Tamils in the Jaffna peninsula, Sri Lanka are able to survive by continuing in practising their traditional healthy lifestyle during this quarantine period. The globe has now shown interest in the lifestyle of Hindu Tamils and their use of healthy food habits and the healthy and spiritual practices. Let us appreciate our ancestors who have shown lived and led an exemplary life for the benefit not only for themselves but for the others also.


# சிவபூமியின் நற்பணிக்கு உதவுங்கள்

**SIVAPOOMI SCHOOL**
ACCOUNT NAME-SIVAPOOMY
COMMERCIAL BANK - JAFFNA
CURRENT ACCOUNT NO- 1060016510
SAVING ACCOUNT NO - 8060016509
SWITCH CORD - CCEYLKLX

**SIVAPOOMI ELDERS HOME**
ACCOUNT NAME-SIVAPOOMI TRUST
HATTON NATIONAL BANK (HNB) - CHUNNAKAM
CURRENT ACCOUNT NO-117010003432
SAVING ACCOUNT NO - 117020039455
HNB Swift Code: HBLILKLX

**SIVAPOOMI MADAM-KEERIMALAI**
ACCOUNT NAME-SIVAPOOMI TRUST
HATTON NATIONAL BANK (HNB) - CHUNNAKAM
CURRENT ACCOUNT NO-117010007096
SAVING ACCOUNT NO - 117020151163
HNB Swift Code: HBLILKLX

**SIVAPOOMI SCHOOL- KILINOCHCHI**
ACCOUNT NAME-SIVAPOOMI TRUST
HATTON NATIONAL BANK (HNB) - kILINOCHCHI SOUTH.
CURRENT ACCOUNT NO-146010005265
SAVING ACCOUNT NO - 146020096897
HNB Swift Code: HBLILKLX


விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

பின்பு இந்தக் கருப்புப் புள்ளிகளை இசைக் குறிப்புகளாக கருதி வலப்புறமிருந்து இடப்புறமாக வாசிக்கும் போது, 40 வினாடிகள் நீடிக்கும் இசையை உருவாக்கமுடிந்தது. கடைசி ஓவியத்திற்கு வருவோம். இது தான் மிக்கெலஞ்சலோவின் (Michelangelo) The Creation of Adam ஆகும். Michelangelo தனது 17 வயதிலேயே தேவாலயத்திற்குரிய கல்லறையில் உள்ள மனித உடல்களின் மூலம் மனித உடற்கூறியலைத் தெரிந்துகொண்டவர். தான் கற்றுக்கொண்டவற்றை ஓவியம் மூலம் கூற விரும்பிய அவர் “The Creation of Adam”ஓவியத்தை உருவாக்கினார். ஓவியத்தில் கடவுள் ஆதாமினை படைப்பது போன்ற காட்சி அமைக்கப்பட்டிருக்கும். இது தற்செயலாக நடந்ததா இல்லை அவர் இதைக் கூறத்தான் இந்த ஓவியத்தை தீட்டினாரா என்பது தெரியவில்லை. ஏனென்றால் ஓவியத்தில் கடவுள் இருப்பதாகக் காட்டப்படும் இடம், மனித மூளையை போல் உள்ளது. அதுவும் சும்மா இல்லை நண்பர்களே, நாம் இன்று மூளையைப் பற்றி தெரிந்துகொண்ட மூளையின் நுணுக்கமான பகுதிகளைக் கூட, அந்த ஓவியத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வளவு காலமும் சர்வசாதாரணமாகப் பார்த்த இந்த ஓவியங்களுக்குப் பின்னால் இவ்வளவு மர்மங்கள் உள்ளன என்பதை நினைக்க ஆச்சரியமாக இருக்கிறதா? அப்படி இருப்பதால் தான் இந்த அனைத்து ஓவியங்களும் மிகவும் பிரபலமாக உள்ளன, இல்லையா? கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் எனது முகநூல் பக்கத்தில். (www.facebook.com/scinirosh)

---

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் அவள் உப்பு போடாவிட்டாலும் கூட வேறு பல வழிகளில் அதீத உப்பு வேறு உணவுகள் வழியாக அவரையும் எங்களையும் சென்றடையும் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். இன்று உணவு என்பது முற்று முழுதாக வீட்டு உணவு அல்ல. உணவகங்களில் கிடைக்கும் உணவுகளை அடிக்கடி உட்கொள்ள நேர்கிறது. அவற்றில் உப்பு அதிகமாகவே இருக்கிறது.

அதற்கு மேலாக பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் உண்ண நேர்கிறது. அவற்றில் பெரும்பாலும் உப்பின் செறிவு அதிகமாகவே இருக்கிறது.

ஆனால் இவற்றில் மட்டுமின்றி நாம் சந்தேகிக்காத பல உணவுகளிலும் உப்பு அதிகமாக இருக்கிறது. பாண், கேக், பிஸ்கற் போன்றவற்றைச் சொல்லலாம்.

பிள்ளைகளும் பெரியவர்களும் விரும்பிச் சாப்பிடும் பொட்டேட்டோ சிப்பஸ் போன்ற பெரியல் வகைகளில் நிறைய உப்பு இருக்கிறது. பக்கற்றில் கிடைக்கும் உருளைக் கிழங்கு பொரியல் மாத்திரமின்றி, மரவெள்ளி, பாகற்காய் பொரியல்கள் யாவுமே உப்புப் பாண்டங்கள்தான்.

ஒவ்வொரு ரோல்ஸ்சிலும் 230 மிகி வரையும், பிட்ஷா ஒரு துண்டில் 760 மிகி சோடியும் இருக்கிறதாம். பற்றிஸ், சமோசா, மிக்ஸர் போன்றவை சற்றும் குறைந்தவை அல்ல. போத்தலில் அடைக்கப்பட்ட மினரல் வோட்டர்களின் சோடியச் செறிவு அதிகம் இருக்கலாம்.

சில வகை மருந்துகளிலும் சோடியம் அதிகமாக உண்டு. அஸ்பிரின், பரசிற்றமோல் போன்ற மருந்துகள் கரையக் கூடிய மருந்துகளாகக் கிடைக்கின்றன. சோடியம் பை காா்பனேட் சேர்ப்பதாலேயே அவை கரையக் கூடிய தன்மையைப் பெறுகின்றன. இவற்றில் சிலதில் உள்ள சோடியமானது ஞ தேக்கரண்டி உப்பின் அளவிற்கு இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒருவரின் தினசரி உப்பு உட்கொள்வு ஒரு தேக்கரண்டியளவே இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

வலிக்கு பொதுவாக உட்கொள்ளப்படும் டைகுளோபெனிக் மருந்தில் சோடியும் [Diclofenac Na] உள்ளது. இதனால்தான் வலி மாத்திரைகளை அளவு கணக்கின்றி உபயோகிக்கும் நோயாளிகளுக்கு பிரஷர் நோய் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவர்கள் பொதுவாக பழவகைகளையும் காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்க்கச் சொல்வார்கள். இதற்குக் காரணம் அவற்றில் உள்ள நார்ப்பொருளாகும். அவை உணவு உறிஞ்சப்படுவதை தாமதப்படுத்துவதால் நீரிழிவு அதிகரிக்காதிருக்க உதவுவதுடன் எடை அதிகரிப்பையும் குறைக்கும் என்பதாலாகும்.

### குருதியில் உப்பு குறைதல்

குருதியில் உப்பு குறைதலை மருத்துவத்தில் [Hyponatremia] என்பார்கள். ஆனால் இது உணவில் உப்பைக் குறைப்பதால் ஏற்படுவதல்ல. இருதய வழுவல், சிறுநீரக வழுவல், ஈரல் சிதைவு, தைரோயிட் குறைபாடு போன்ற நோய்களால் ஏற்படும். கடுமையான வயிற்றோட்டம் வாந்தி போன்றவற்றால் நீரிழப்பு நிலை ஏற்படுவதாலும் இது ஏற்படலாம். இவை மருத்துவர்களால் உடனடியாக அணுக வேண்டிய பிரச்சனைகள் ஆகும்.

இருந்தபோதும் உணவில் உப்பின் தினசரி அளவை 1.5 கிராம் அளவிற்கு கீழ் குறைப்பது நீரிழிவு இருதய வழுவல் சிறுநீரக வழுவல் போன்ற பிரச்சனை உள்ளவர்களுக்கு நல்லதல்ல என அண்மைய மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. இறுதியாகஉணவில் உப்பைக் குறையுங்கள்.ஒருவரது தினசரி உப்புத் தேவை ஒரு தேக்கரண்டிக்கு மேற்படக் கூடாது. உப்பு அதிகமுள்ள பதப்படுத்தப்பட்ட மற்றும் கடை உணவுகளை ஒதுக்குங்கள். உப்பைக் குறைப்பது நல்லது. ஆனால் முற்று முழுதாக உப்பில்லாத உணவு அவசியமல்ல.

பழவகைளை உணவுகள் அதிகம் சேருங்கள். பொதுவாக பலதரப்பட்ட போசாக்குகளும் அடங்கிய சமச்சீரான உணவுகள் [Balanced food] ஆக உட்கொள்வது நல்வாழ்வற்கு உகந்தது.

---

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இருப்பாள்? என்று எண்ணினான். ஆனால் சுமதி தன் கணவன் தன்னை

காப்பாற்றுவான், என்று எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஏதாவது மரக்கட்டையை கையிலெடுத்து கார் கண்ணாடியை உடைத்து உள்ளே வந்து விடுவார் என்று எதிர்பார்த்தாள். அப்படி அவர் வரும் போது, தானும் வீரத்தோடு போராடி அவனை வீழ்த்தி விட வேண்டும் என மனக்கணக்கு போட்டு இருந்தாள். ஆனால் எல்லாம் கற்பனை ஆகிப் போய்விட்டது. அவளுடைய கணவனும் கையாலாகாதவனாக காரின் பின்புறமும் முன்புறமும் ஓடிக்கொண்டிருந்தான். ஆனால் உள்ளே வருவதற்கான எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை என்பதை பார்த்து அவளுடைய அந்த இரவு அவளிற்கு நரகமாக்கிக் கொண்டிருப்பதை எண்ணி வருந்தினாள். சில பல நிமிடத் துளிகள் நீடித்தன வந்தவனும் சுமதியை விட்டுவிட்டு, காருக்குள் இருக்கும் போன், பணம், நகைகள் போன்றவற்றை எடுத்துக் கொண்டு இறங்கினான். போகும் போது முயலையும், எடுத்துக்கொண்டு போகின்றான். இறந்த முயலைக் எடுத்து, தோளின் மேலே போட்டு, நடைபோட்டு சென்றான் அந்த முரடன். நடப்பவற்றை அவதானித்தபடி இருந்த சுதர்சன், உடனடியாக செயற்பட ஆரம்பித்தான். காரினுள்ளே வந்து இருந்தவண்ணம், மனைவியை பார்த்தான்.

அவள் ஆடைகளை சரி செய்த வண்ணம், அழுதபடி இருந்ததைப் பார்த்து, என்ன நடந்தது என்று? கரகரப்பான குரலில் கணவன் கேட்டதைப் பார்த்து சுமதி திகைத்துப் போனாள். எப்படி இருக்கின்றாய்? என்று கேட்பீர்கள் என்று நினைத்தேன். ஏன் ஒரு மாதிரியாக கதைக்கிறீங்க? என்று சுமதி கேட்டாள் அது இருக்கட்டும், இங்க இதுவரைக்கும் என்ன நடந்தது? என்று குற்றம் சாட்டுவதைப்போல் சுதர்சன் அவளைப் பார்த்து கேட்டான். ஏன் உங்களுக்கு ஏதும் தெரியாதா? பதிலுக்கு அவளும் வினாவினாள். கோபத்தின் உச்சிக்கே போய் விட்டான் சுதர்சன் நான் ஆம்பிள அப்படித்தான் கேட்பன், கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு! திகைத்துப் போனாள் சுமதி நிமிர்ந்து அவனைப் பார்த்து, ஆம்பிளையா? உங்கள் ஆம்பள தனத்தை வந்த முரடனிடம் ஏன் காட்டவில்லை? அந்த மனிதனின் முகத்தில் நான் என் நகத்தால் கீறியபோது, அவன் ரத்தத்தைத் துடைத்துவிட்டு பின், என்னை அடித்தான். அப்போது இந்த ஆம்பளையின் கைகள் எனக்கு உதவிக்கு வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நீங்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. என் உயிர் காதலி, என் உயிர் காதலி, என்று சொல்லுவீங்களே? அந்த காதல் செத்துவிட்டதா? ஆனால் இப்போ உங்க மேல வைத்த நம்பிக்கை மட்டுமல்ல, உங்கள் மேல் வைத்த காதலும் செத்து விட்டது! என்று சொல்லிவிட்டு காரை விட்டு இறங்கி விட்டாள். சுமதி என அழைக்க எண்ணிய சுதர்சன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான். நான் ஆம்பிள, லேசுல பணிந்து போகக் கூடாது. எவ்வளவு நேரம் வெளியில குளிரில் நிற்பாள்? தானாக வருவாள் என்று எண்ணினான். ஆனால் எதிர்ப்பக்கம் இருந்து வந்த பஸ்சை மறித்து, அதில் அவள் ஏறி சென்று விட்டாள். தப்பு செய்து விட்டேனோ? என எண்ணிய படி, அவன் காரை ஸ்டார்ட் செய்தான். காரும் ஸ்டார்ட் ஆகவில்லை. அவனுடைய வாழ்வும் அதே இடத்தில் நின்று விட்டது.

சுதர்சனின் வாழ்வும் காரும் நடுத்தெருவில் நின்றது. கணவனை திரும்பிக்கூட பார்க்காமல், அவள் சென்று கொண்டே இருந்தாள். வாழ்க்கையில் காதல் மட்டுமல்ல ஆணித்தரமான நம்பிக்கையும் தேவை என்பதை சுதர்சன் அன்று புரிந்தானோ? இல்லையோ?







**வெற்றிமைந்தன்**

### தப்புத் தாளங்கள்

**1978** ஆம் ஆண்டு பால சந்தர் கதை திரைக் கதை வசனம் எழுதி இயக்கிய இன்னொரு முக்கியமான படம் தப்புத் தாளங்கள். தமிழ்நாடு அரசின் சிறந்த வசனகர்த்தாவுக் கான விருது கிடைத்த படம் இது.

ரஜினிகாந்த் கதாநாயகனாக நடித்தார். மரோ சரித்ரா அறிமுக நாயகி சரிதா தான் கதாநாயகி. கமல் இந்தப் படத்தில் கௌரவ வேடத்தில் நடித்திருந்தார். படம் தமிழில் தப்புத் தாளங்கள் என்றும், கன்னடாவில் தப்பித தாளா என்றும் வெளியான து.பின்னர் மலையாளத்தின் கழுக்கன் எனும் பெயரில் தயா ரானது.




விரலை எடுக்கணும்ன்னா முப்பது ரூபா, கையை வெட்ட ணும்ன்னா 300 ரூபா, காலை வெட்டணும்ன்னா மூவாயிரம் ரூபா, ஆளையே போடணும்னா பத்தாயிரம் ரூபா என ரவுடி கதாபாத்திரத்தில் ரஜினிகாந்த் புகுந்து விளையாடியிருப்பார். ரஜினி படங்களில் முக்கியமான படங்களில் ஒன்று இது.

1979ம் ஆண்டு வெளியான படங்களில் ஒன்று எல்லோ ருக்கும் தெரிந்தபடம் நினைத் தாலே இனிக்கும் !!

### நினைத்தாலே இனிக்கும்

பாலசந்தருக்கென ஒரு இமேஜ் உருவாகியிருந்த கால கட்டம். நடுத்தர வர்க்கக் கதை. சீரியசான கதாபாத்திரங்கள். வலிமிகுந்த, வலிமை மிகுந்த கிளைமேக்ஸ் என ஒரு டெம் ளேட் கதைகளில் பாலசந்தர் வலம் வந்து கொண்டிருந்த போது யாரும் எதிர்பாராத வித மாக சட்டென தனது பாணியை மாற்றிக்கொண்ட படம் நினைத் தாலே இனிக்கும்.

பாடல்களுக்காகவே இந்தப் படம் காலமெல்லாம் நினைவு கூரப்படும் என்று தைரியமாகச் சொல்லலாம். அந்த அளவுக்கு இந்தப் படத்திலுள்ள பாடல்க ளெல்லாம் மிகப்பிரபலம்.

‘எங்கேயும், எப்போதும் சங்கீதம் சந்தோஷம்’, ‘சம்போ சிவசம்போ’, ‘இனிமை நிறைந்த உலகம்’, ‘பாரதி கண்ணம்மா’, ‘நம்ம ஊரு சிங்காரி’ உட்பட இந்தப் படத்தில் பெரும்பாலான பாடல்கள் சூப்பர் டூப்பர் வகைய றாவுக்குள் வரக்கூடியவை.

சீரியஸ் பாணி பாலசந்தர் இந் தப் படத்தில் எடுத்த அவதாரம் நகைச்சுவை. அதற்காக அவர் சுஜாதாவின் கதையைத் தேர்ந் தெடுத்தார். கமலஹாசனும், ரஜினிகாந்தும் இணைந்து நடித் தார்கள்.

சிங்கப்பூருக்கு ஒரு இசைக் குழு செல்கிறது. அங்கே ஹீரோ தனது காதலியைச் சந்திக்கி றான். அவள் ஊனமுற்றவள் எனும் உண்மை அப்போது தான் தெரிகிறது. என செல் கின்ற கதை முடிவில் ஒரு சோக நிகழ்வுடன் தான் முடிகிறது. ஆனால் படம் இலகுவான நகைச் சுவையை இழையோட விட்ட படம்.

இன்றைய திகதி வரை, ரஜினியும், கமலும் இணைந்து நடித்த கடை சிப் படமும் இது தான்.

ஒரே நேரத்தில் தமிழ் தெலுங்கு இரண்டிலும் தயாராகி, தெலுங்கில் ‘அந்தமானின அனுபவம்’ எனும் பெயரில் வெளியா னது. ஜெயபிரதா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தார். ரஜினிகாந்தின் ஸ்டைல் வெகுவாகப் பேசப்பட்ட திரைப்படங்களில் ஒன்று






இது. இந்தப் படம் சமீபத் தில் டிஜிடலைஸ் செய்யப் பட்டு மறு வெளியீடு செய் யப்பட்டது.

இந்தப் படத்தின் மூலம் ஒருவரை பாலசந்தர் தமிழ்த் திரையுலகிற்கு அறிமுகம் செய்தார். அவர் எஸ்.வி.சேகர் !!!

பாலசந்தரின் அக்மார்க் படங்களில் ஒன்று என இந்தப் படத்தைச் சொல்ல முடியாது. ஆனாலும் ஒரு கமர்ஷியல் மசாலா என நிச்சயம் சொல்லலாம்.

ஆனால் அந்த ஆண்டு வெளியான நூல் வேலி மிகவும் கனமான கதையின் மேல் கட்டப்பட் டிருந்தது. சரத் பாபுவும், சுஜாதா வும் முதன்மைக் கதாபாத்திரங்களாக நடித் திருந்தனர். சரிதா முக்கிய மான ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். மகளைப் போல நினைத்துக் கொண் டிருக்கும் ஒரு சின்னப் பெண்ணை மோகத்தில் நாயகன் பாலியல் உறவு கொள்வதும், அதனால் குடும்பத்தில் ஏற்படும் உளவியல் ரீதியிலான சிக்கல்களும் படத்தில் பிரதானமாக இருந்தன.

மனதைக் கனக்கச் செய் யும் முடிவு பாலசந்தரின் அக்மார்க் முத்திரையுடன் இருந்தது. தமிழிலும், தெலுங்கிலும் ஒரே நேரத் தில் தயாரான இந்தப் படத் துக்கு தெலுங்கில் குப்பேடு மனசு என்று பெயர்.

இந்த ஆண்டு ‘இதி கத காது’ எனும் தெலுங்கு படத்தையும் கே.பாலசந்தர் இயக்கினார். கமலஹா சன், சிரஞ்சீவி, சரத்பாபு,

30 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஜெயசுதா, ராமபிரபா நடித்த இந்தப் படம் பாலசந்தர் தமிழில் இயக்கிய ‘அவர்கள்’ படத்தின் தெலுங்கு வடிவம்.

இதற்கு அடுத்த ஆண்டு கே.பாலசந்தர் ஒரே ஒரு படம் இயக்கினார். அந்த வருடம் அந்த ஒரு படமே போதுமானதாய் இருந்தது தமிழ் சினிமாவுக்கு. வறுமையின் நிறம் சிவப்பு !

## வறுமையின் நிறம் சிவப்பு

கே.பாலசந்தரின் சமூக அக்கறையை பளிச் என சொன்ன படங்களில் வறுமையின் நிறம் சிவப்பு படத்தையும் சொல்லலாம். கமலஹாசனும், ஸ்ரீதேவியும் இணைந்து நடித்திருந்தார்கள்.

வேலை இல்லாத மூன்று இளைஞர்களின் வாழ்க்கைப் பயணம் தான் இந்தப் படத்தின் மையம். அந்தக் காலகட்ட சமூக, அரசியல் நிலைப்பாடுகளை இந்தப் படம் பேசியது.



நேர்மை எனும் தனது கொள்கையில் நிலையாக இருக்கிறான் கதாநாயகன். அதனால் எந்த வேலையிலும் அவனால் நிரந்தரமாகத் தங்க முடியாத சூழல். இருந்தாலும் தனது கொள்கையை விட்டு விட அவன் தயாராக இல்லை. எல்லாவற்றையும் இழந்தாலும் தனது இலட்சியத்தை இழக்காத கதாநாயகன் கடைசியில் முடிதிருத்தகம் வைக்கிறான். காட்சிகளை வெப்பமாகவும், கவிதையாகவும், உணர்ச்சிகரமாகவும் இந்தப் படம் அடுக்கி வைத்திருந்தது. பாலசந்தர் படங்களில் இந்தப் படம் டாப் டென் பட்டியலில் இடம் பெறும் அத்தனை தகுதிகளையும் கொண்டிருக்கிறது.

சிப்பி இருக்குது முத்தும் இருக்குது, நல்லதோர் வீணை செய்தே, தீர்த்தக்கரையினிலே என பிரபலமான பாடல்களுக்குச் சொந்தக்காரன் இந்தத் திரைப்படம். இத்திரைப்படம் பின்னர் தெலுங்கிலும், இந்தியிலும் வெளியானது.

சிறந்த இயக்குனருக்கான தமிழக அரசின் விருதை இந்தப் படம் பெற்றது. அதே போல சிறந்த இயக்குனருக்கான பிலிம் ஃபேர் விருதையும் இந்தப் படம் பெற்றது.






1980ம் ஆண்டு ஒரே ஒரு படம் தந்த கே.பாலசந்தர், அடுத்த ஆண்டு வட்டியும் முதலுமாய் படங்களை வெளியிட்டார்.

1981ம் ஆண்டு வெளியான கே. பாலசந்தரின் திரைப்படங்கள் 9 !!! பாலசந்தரின் படங்கள் அதிக அளவு வெளியான ஆண்டு அது தான் 1981 !

---

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

எடுத்து பேசுவதே இல்லை. பண்டைய கோயில்களில் சிற்பங்களை பார்த்தீர்கள் என்றால், அது நம் முன்னோர்கள், பாலியல் அடையாளங்கள் சார்ந்து, இப்பொழுது மேலைதேசங்களில் முற்போக்கு சிந்தனை என்று கருதுவதை தமிழர்கள் எப்பொழுதோ ஏற்றுக்கொண்டவர்கள் என்பதை புரியவைக்கும். காலனித்துவ ஆட்சியின் பின், எம்மை வெள்ளையர்கள் ‘ஒழுக்கப்படுத்திய’ தன் விளைவாக, இன்று நாம் பின்தங்கியவர்கள் ஆகிவிட்டோம். ஓரினச்சேர்க்கை மற்றும் பாலியல் அடையாளங்கள் பற்றி மௌனம் கடைப் பிடிக்கிறோம். இவை எல்லாம், இப்பொழுதைய கறுப்பு இனவாதத்துடன் எப்படி தொடர்பு படுகிறது?

அடிப்படையில், நம் கைகளிலும் கறை இருக்கிறது. வெள்ளைத் தோலின் மேலான மோகம் எம்மை ஆழமாக பாதித்திருக்கிறது. எமக்குள் இருக்கும் இந்த புரையேறிப்போன மடமைத்தனம் பற்றி எமக்குள் எவ்வளவுக்கு விழிப்புணர்வு இருக்கிறது? எம்மில் எத்தனை நிறம் குறைவான இளம் பெண்கள், தம் தாய் தந்தையராலேயே ஏதோ வேண்டாத நோய் வந்தவர்கள் போல் பார்க்கப்படுகிறார்கள்? எம்மில் எத்தனை வயது வந்தோர் சிறுவயதில் தம் நிறக்குறையால் வேற்றுமை பாராட்டப்பட்டு, இன்றும் அந்த பாதிப்பால் மனம் வெந்து சுயமரியாதைக் குறைவோடு வாழ்கிறார்கள்?

தற்பொழுது இருக்கும் புலம்பெயர் சமூகத்தின் மிகப்பெரும் சாபக்கேடு தென்னிந்திய சினிமாவின் உள்வாங்கல். அத்தி பூத்தாற் போல் ஒரு சில நல்ல படைப்புகள் வரத்தான் செய்கின்றன. Fair & Lovely போட்டால் தான் பெண் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளலாம் என்ற செய்தியை தரும் விளம்பரங்களில் இருந்து, சிங்கம் திரைப்படத்தில் சூர்யா ‘ஆபிரிக்க குரங்கு’ என்று ஒரு கறுப்பினத்தவரை தாழ்மைப்படுத்தி பேசுவது வரை, இன, நிற பால்வெறி இந்த துறையில் தலைவிரித்தாடுகிறது. கறுப்புநிற நடிகை தேவைப்படும் போது மட்டும் வெள்ளை தோல் கொண்ட நடிகைகளுக்கு கறுப்பு பூசி ஒரு இயல்பில்லாத தோற்றத்தை முன்னிறுத்துவார்கள். இந்த அப்பட்டமான முட்டாள் முரண்பாடுகளை பார்த்து சிரிப்பதா, கோபம் கொள்வதா?



எம் ‘மாதிரி சிறுபான்மையினர்’ பதவியை தக்க வைத்துக்கொள்ள நாம் என்ன செய்கிறோம்? பாரிசில் இஸ்லாமிய தீவிரவாதிகள் தாக்குதல் செய்தால் உடனே பிரான்ஸ் நாட்டு கொடியை எம் முகநூல் பக்கத்தில் போட்டு அனுதாபம் தெரிவிக்கிறோம். அதுவே இஸ்லாமியர்களுக்கு எதிராக பெரும்பான்மையினர் செய்யும் அநீதி என்றால், அதை கண்டும் காணாமல் விட்டுவிடுகிறோம். இனவெறி அதனால் பாதிக்கப்படுபவர்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குகிறது. பதட்டம், போதை நாட்டம், இருதய, மற்றும் வேறு உடல் நோய்களுக்கு கூட காரணமாகிறது.

இனவாதம் எம் கண்ணை மறைக்கிறது. இனம் சார்ந்து, மதம் சார்ந்து பிழையான வார்படங்களை உருவாக்குகிறது. உங்களுக்கு தெரியுமா? அமெரிக்காவில் மகப்பேற்றின் போது கறுப்பின பெண்கள் இறப்பு விகிதம் வெள்ளை இனத்தவரை விடவும் 2-6 முறை அதிகம் என கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது மற்ற சிறுபான்மையினருக்கும் பொருந்தும். கறுப்பினத்தவர் பொதுவாகவே வலியை அதிகம் தாங்குவார்கள் என்ற ஒரு தவறான வார்படத்தால், அவர்கள் வலியை மருத்துவதுறையினர் உதாசீனம் செய்கிறார்கள் என்றும் இதற்கு ஒரு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. எப்பொழுதுமே அதிகாரத்தில் இருப்பவர்கள் தான் அந்த வார்படங்களை நிர்ணயிக்கிறார்கள். இலங்கையில் இருந்து அகதிக்கப்பல்கள் கனேடிய எல்லைகளை தொட்டபோது, அந்த அதிகாரம் தான், தமிழர்களை பயங்கரவாதிகளாக வரையறுத்தது.



# உலக அழகியையும் உலுக்கிய கோரோனா!



கொரோனா பாதித்த நடிகை ஐஸ்வர்யா ராய் மற்றும் அவரது மகள் ஆரத்யா ஆகிய இருவரும் (17.07.2020) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இந்தி திரையுலகில் பிரபல நடிகரான அமிதாப்பச்சன் மற்றும் அவரது மகன் அபிஷேக் பச்சன் ஆகிய இருவருக்கும் கொரோனா பாதிப்பு இருப்பது கடந்த 11ந்தேதி உறுதி செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து நடிகர் அமிதாப்பச்சனின் மனைவி ஜெயா பச்சன், மருமகள் ஐஸ்வர்யா ராய் ஆகியோருக்கும் கொரோனா பரிசோதனைகள் செய்யப்பட்டன.

இந்த நிலையில், அமிதாப் பச்சனின் மருமகள் மற்றும் அபிஷேக் பச்சனின் மனைவியான நடிகை ஐஸ்வர்யா ராய்க்கும் கொரோனா பாதிப்பு இருப்பது கடந்த 12ந்தேதி உறுதி செய்யப்பட்டது. இதேபோன்று ஐஸ்வர்யா ராயின் மகள் ஆரத்யாவுக்கும் கொரோனா பாதிப்பு உறுதியானது. எனினும் ஜெயா பச்சனுக்கு பாதிப்பு இல்லை.

இதனையடுத்து, நடிகை ஐஸ்வர்யா ராய் மற்றும் அவரது மகள் ஆரத்யா பச்சன் வீட்டிலேயே தங்களை தனிமைப்படுத்தி கொண்டனர்.இந்த நிலையில்,அவர்கள் இருவரும் நானாவதி மருத்துவமனையில் 17.07.20 இன்று அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

# சூரியா 100 நாட்களைத் தாண்டியது!



முன்பு ஒரு படம் திரைக்கு வந்தால் 100 நாட்கள் ஓடினால் அது வெற்றிப்படம். இப்போ 4 வாரம் ஓடினால் மாபெரும் வெற்றிப்படம். ஆனால் இப்போ சொல்லவருவது 100 நாள், அது வேறு கதை. சென்னையில் பல்வேறு இடங்களில் தெரு ஓரங்களில் வசிக்கும் மக்களுக்கு நடிகர் சூர்யா சார்பாக அவரின் ரசிகர்கள் உதவி செய்து உள்ளனர். கொரோனா பாதிப்பு காரணமாக இந்தியாவில் ஏழைகள் மிக கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். தினக் கூலிகள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் சென்னையில் இப்படி கஷ்டப்படும் மக்களுக்கு உதவ நடிகர் சூர்யா மற்றும் அவரின் ரசிகர்கள் களமிறங்கி உள்ளனர். சென்னையில் பல்வேறு இடங்களில் தெரு ஓரங்களில் வசிக்கும் மக்களுக்கு நடிகர் சூர்யா சார்பாக அவரின் ரசிகர்கள் உதவி செய்து உள்ளனர். அதிலும் ஒரு நாள் செய்யப்பட உதவி இல்லை இது. கடந்த 100 நாட்களாக மக்களிடம் சென்று மூன்று வேளையும் தேடி தேடி உணவுகளை இவர்கள் வழங்கி உள்ளனர். கடந்த 100 நாட்களில் மட்டும் 30 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டு உள்ளது. சூர்யா ரசிகர்கள் இதோடு முடிக்காமல் வரும் நாட்களிலும் இதேபோல் உதவி செய்ய திட்டமிட்டு உள்ளனர்.

# தீபிகாவுக்கு 20 கோடி சம்பளமா..?

தென்னிந்திய சினிமாவில் இது தான் அதிகமாம்! (பாகுபலி) பிரபாஸக்கு ஜோடியாக நடிக்கும் தீபிகா படுகோனுக்கு இதுவரை எந்த ஹீரோயினும் வாங்காத சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கீர்த்தி சுரேஷ் நடித்த 'நடிகையர் திலகம்' படத்தை இயக்கியவர் நாக் அஸ்வின்.

இதையடுத்து அவர் இயக்கும் படத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கிறார். இந்தப் படம் சயின்ஸ் பிக்சன் படம். ரூ.400 கோடி பட்ஜெட் மூன்றாம் உலகப் போரை மையமாக வைத்து இதன் கதை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படம், தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் உருவாகிறது. தீபிகா படுகோன் நடிப்பதை படக் குழு சமீபத்தில் உறுதி செய்துள்ளது. திராவகம் வீசப்பட்ட பெண்ணாக சப்பக் என்ற படத்தில் நடித்த தீபிகா, அதற்கு பிறகு வேறு படங்களை ஏற்காது இருந்து வந்தார். இந்நிலையில், இந்தப் படத்தில் அவர் நடிக்க இருக்கிறார். இதில் நடிக்க அவர் அதிக சம்பளம் கேட்டதாகவும் அதனால் தயாரிப்பு நிறுவனம் யோசித்து வந்ததாகவும் செய்திகள் வெளியானது. ஆனால், அவர் எவ்வளவு சம்பளம் கேட்டார் என்பது பற்றிய விவரங்கள் வரவில்லை. இந்நிலையில் அவர் ரூ.20 கோடி சம்பளம் கேட்டதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதற்குத் தயாரிப்பு தரப்பு ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. அதிகப்பட்ச சம்பளம் அதிகப்பட்ச சம்பளம் இதுபற்றி அதிகாரபூர்வ தகவல் இல்லை என்றாலும் தென்னிந்திய சினிமாவில் ஒரு ஹீரோயினுக்கு வழங்கப்படும் அதிகப்பட்ச சம்பளம் இது என்று தெரிவிக்கின்றனர். சில உச்ச ஹீரோக்களுக்கு கூட இவ்வளவு சம்பளம் இல்லை என்று கூறப்படுகிறது. படத்துக்கு தற்காலிகமாக பிரபாஸ் 21 என்று டைட்டில் வைத்துள்ளனர்.







EurAsian-Tour
Emirates
EurAsian-Tour
Further Str.146
41462 Neuss
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 7387 83 Fax:02131 73 87 84
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
'Jasmine Silk House"
Fester Str.50-
40882 Ratingen
Tel: 02102 844744
HP: 0173 1937 325


Asia Bazar
துரித பணமாற்றுச்சேவை
ஆசிய, ஆபிரிக்க உணவு வகைகள்
வியாழன், சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள் கடல் உணவுப்
பொருட்கள் இன்னும் பல...
Ria Money Transfer
VALUTRANS MONEY TRANSFER
MoneyGram
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4 41061 Mönchengladbach
Tel: 02161 208303
Fax: 02161-309282


Stuttgart நகரில்...
PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Ludwig str.87a
70197 Stuttgart
தரம்மிக்க தங்க நகைகள்
நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில்
அமைந்த சேலைகள்
மற்றும் இமிடேசன்
நகைகள் அனைத்திற்கும்
நீண்ட கால நம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
Tel: 0711 615 8976/ 0170 334 4059


before
after
Nachher
G.Vijay Home Designer
உங்கள் வீடுகளை சிறப்பாக
வடிவமைக்க நாடுங்கள்!
Sauber- Professuonell- Punktlich- Preiswert
Web.www.vijay-home-designer.de
சிறந்த தொழில்
தேர்ச்சிபெற்றவர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்
Kleiststrasse 07
41844 Wegberg
Germany
Facebook:
Vijay Home Designe Gunaratnam 0176 7221 8466
inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66
e.mail: G.Vijay@outlook.de


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புதிய இடத்தில்!! புதிய பொலிவுடன்!!
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 68, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Double Horse
Nila
AGAM
அகம்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
BTM
Aachi
Rabeena
Tel: 0231 860 26 96
STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698